உ

ஓம் தத் சத்

ஸ்ரீ பரப் பிரம்மனே நம:

ஸ்ரீ விதுரர் அருளிய
நீதிமொழிகள்

(முதல் பாகம்)

தத் துவ மஸி
அகம் பிரம்மாஸ்மி



பிரக்ஞானம் பிரம்மம்
அயமாத்மா பிரம்மம்

…ஸ்ரீ இராமசாமி சுவாமிகள்
(ஆனந்தாஸ்ரமத்தின் ஸ்தாபகர்)

…லயம் எடப்பாடி ரோட்டிலிருக்கும் ஆனந்தா …லாவது தலைவர் ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ் …ர்களின் 12-வது ஆண்டு குருபூஜை விழாவில் கோவிலூர் … தவத்திரு-சோம-கோபால சுவாமி அவர்க-ளின் விருப்பப்படி மேற்படி ஆஸ்ரமத்தின் 2-வது தலைவர் திருவாளர் V. R. S. இராமசாமி செட்டியார் அவர்களால் இலவச வெளியீடாக வெளியிடப்பட்டது. [முதல் பாகம்]

ஆங்கீரஸ ஸு வைகாசி மீ 16-ம் தேதி

29-5-1992 — வெள்ளிக்கிழமை

ௐ

ஹிந்துக்களின் கடமைகள்.

தினசரிக் கடமைகள்.

1 தினசரி சூரியன் உதிப்பதற்குமுன் எழவும்.

2 காலையில் எழும்போதும், குளித்தபின்னும், உணவு அருந்தும் முன்பும் அவரவர் இஷ்ட தெய்வத்தை வணங்கவும்.

3 நெற்றியில் ஹிந்து மதச் சின்னங்களுள் ஏதேனும் ஒன்றைக் (விபூதி. குங்குமம், சந்தனம், நாமம்) கட்டாயம் இட்டுக் கொள்ளவும் வெட்கப்பட வேண்டாம் பெருமை கொள்ளவும்

4 பூஜைக்கு என தனி இடமோ, தனி அறையோ ஒதுக்கி இஷ்ட தெய்வத்தின் திருவுருவிற்கு ஊதுவத்தியோ, கற்பூரமோ ஏற்றவும். ஷ அறையை சுத்தமாக வைத்துக்கொள்ளவும்.

5 எந்த நேரமும் இஷ்ட தெய்வத்தின் நாமத்தை மறவாமல் உச்சரித்துக்கொண்டே இருக்கவும்.

6 தினசரி கொஞ்சம் நேரம் ஒதுக்கி, நமது சமய நூல்களில் ஏதேனும் ஒன்றில் ஒரு சில பக்கங்களைப் படிக்கவும்.

7 நம்மிலும் நலிந்த நமது சகோதரர்கட்கு ஏதேனும் இயன்ற உதவிகளைத் தினசரி செய்யவும்.

8 வீட்டில் மாலையில், பூஜையறையில் அவசியம் அகல்/குத்து விளக்கேற்றி வைக்கவும்.

9 இரவு படுக்கப் போகும் முன் இஷ்ட தெய்வத்தைச் சற்று நேரம் தியானித்துவிட்டு உறங்கவும்.

ஹிந்துக்களின் வாரக் கடமைகள்.

1 பிரதி வெள்ளியோ அல்லது விருப்பப்பட்ட நாளிலோ தவறாமல் குடும்பத்துடன் கோவிலுக்குச் சென்று வரவும்

2 வாரம் ஒருமுறை காலை அல்லது மாலை தனியாக 10 நிமிடம் தியானத்தில் அமரவும். தியான முறை தெரிந்து கொள்ளவும்

3 அருகில் நடைபெறும் பஜனை, கதாகாலட்சேபம், ஆன்றோர் சொற்பொழிவுகட்குச் சென்று பயனடையவும்.

4 ஹிந்து இயக்கங்கள நடத்தும் நிகழ்ச்சிகளில் நண்பர்களுடன் கலந்து கொள்ளவும். (முடிந்தால் சேவை செய்யலாம்.)

5 அருகிலுள்ள மருத்துவமனை ஒன்றிற்குச் சென்று அங்குள்ள நோயாளிகட்காகப் பிரார்த்தனை செய்வதோடு, அவர்கட்குத் திருக்கோவில் பிரசாதம் வழங்கி ஆறுதல் கூறவும்.

உ

ஸ்ரீ ராமஜெயம்

முன்னுரை

எல்லாம்வல்ல இறைவனின் தனிப்பெரும் கருணையினால் தொடர்ந்து நமது ஆனந்தாஸ்மரத்தின் முதலாவது தலைவர் **ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகளின் 12** ஆம் ஆண்டு குருபூஜை இன்று நடைபெறுகிறது. இந்த நன்னாளில் நமது ஆஸ்ரம குரு முதல்வர் கோயிலூர் மரபு **தவத்திரு சோம. கோபாலசாமி சுவாமிஜீ** அவர்களின் வழிகாட்டுதலின்படி, பாலின் பயனும் வெண்ணெய்த் திரட்டித் தந்தாற்போலவும், கனிகளின் சத்தாம் ரசத்தினைப் பிழிந்து தந்தாற்போலவும், கன்னலின் சுவையாம் சாற்றினைப் பிரித்து தந்தாற்போலவும், அளவிற்கடங்கா நிற்கும் ஆன்மீக நூல்களில் இருந்து அரிய கருத்துகளைத் தொகுத்து சிறு நூல்களாக வெளியிடுவது நமது ஆனந்தாஸ்மரத்தின் மரபு. அதன்படி இன்று அரசர்க்கும் ஏனையோர்க்கும்அறம் சார்ந்த வாழ்வியலை விளக்கும் ஸ்ரீ விதுர நீதிகள் எனும் இச்சிறு நூல் இலவசமாக வெளியிடப்படுகிறது. ஒப்புவமை இல்லாது சிறப்புற்றுச்சுடரும் திருக்குறல் போல் இந்த ஸ்ரீ விதுர நீதிகள் என்னும் நூலும் அறம் சார்ந்த கருத்துக்களைச் சுருக்கமாகவும் அதே சமயம் தெளிவாகவும் எடுத்துரைக்கின்றது. கொள்ளுதல் யாவை, தள்ளுதல் யாவை என்று அறிய நன்மையையும் தீமையையும் தெளிவுபட பிரித்துக் காட்டுகிறது. இதனை ஊன்றிப்படித்து, சிந்தித்து, தெளிந்து அதன்படி வாழ முற்பட்டால் அது ஆன்ம சாதகர்களுக்கு பெரும் பயன் விளைவிக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவு. மற்றும், இந்நூலில் ஸ்ரீ ஆதிசங்கரின் பரமாத்வைத கருத்துக்களை விளக்கும் பாடல்களும், மேலும், பல தோத்திரங்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

கருணை மூர்த்தியான கடவுள் பரந்து விரிந்து சுட்டெரிக்கும் பாலைவனங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக சோலைகளையும் படைத்திருப்பது போல், ஆழ்ந்து அகண்டிருக்கும்

பெருங்கடலில் அரிய முத்துக்களையும் ஆக்கி வைத்திருப்பது போல், பலகோடி பாமரர்களைக் கொண்ட மக்கள்சமுதாயத்தில் உயர்வற உயர்ந்து மயர் வற மதிநலம் பெற்ற மகான்களையும் அளித்திருக்கிறார். பூ வினம் பலவாக இருப்பதுபோல், உயிரினம் எண்ணிறந்து இயங்குவது போல், மகான்களும் அநேக விதங்களாக பிரிந்து நிற்கின்றனர். சுக முனிவரையும் ஒளவையாரையும் போல் பிறவி முதலே ஞானிகளாக இருப்பர் சிலர். அருனகிரிநாதரையும் பட்டினத்து அடிகளையும் போல் இடையில் ஞானம் பெறுபவர் சிலர். மானிடப்பிறவி முழுவதும்முயன்று, தெளிந்து, முடிவில் உயர் ஞானம் பெறுபவர் அநேகர். இந்த இறுதியில் சொல்லப்படும் வகையைச் சார்ந்தவரே நம்முடைய ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகள் ஆவார். நமது ஆனந்த ஆஸ்ரம ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ இராமசாமி சுவாமிகளை குருவாகக் கொண்டு ஆண்மீகத் துறையில் தீவிர முன்னேற்றம் அடைந்தவர் ஆவார்.

அவர் பக்தி மிகுந்த பெற்றோருக்கு முதல்மகனாக 1901ம் ஆண்டு தோன்றினார். குடும்பம் வறுமை நிலையில் இருந்தபடியால்முதலில்பொருளாதாரவசதியை உயர்த்துவதைமுதல் கடமை என்று கொண்டு மிகவும் உழைத்து அயல் நாட்டு வாணிபத்திலும் ஈடுபட்டு வேண்டிய பொருள் ஈட்டி குடும்ப நிலையை நல்ல நிலைமைக்கு கொண்டு வந்தார். அந்த இளமைப் பருவத்திலேயே அவருடைய மன உறுதியும் விடா முயற்ச்சியும் உழைப்புத் திறனும் மிகச் சிறந்ததாக விளங்கின சிறுப்பிராயத்திற்கு உண்டான கேளிக்கை விளையாட்டுகளில் அவர் மனம் ஈடுபடவில்லை. அவர்தம் சொந்த வாழ்க்கையில் அநேக துன்பங்கள் தோன்றினாலும் அதை எல்லாம் மிக்க மன உறுதியோடு தாங்கிக் கொண்டார். துறவிகளையும் மடம், ஆசிரமம் போன்ற ஆன்மீக நிலையங்களையும் அடிக்கடிநாடி ஆன்மீக கருத்துக்களை உணரத்தலைப்பட்டார் சென்னை வியாசர்பாடியிலுள்ள மடத்தினருடனும் அவருக்கு தொடர்பு ஏற்பட்டது. பிறகு மலேயா நாட்டில் வசித்தபோது அங்கிருந்த விவேகானந்தா ஆசிரமத்திற்கு தினசரி தவறாது சென்று வழிபட்டு வந்தார். மலேயாவில் தங்கியிருந்தபோது தம்முடைய உணவை தாமே சமைத்து

53-1

உண்பார். தம்முடைய துணிமணிகளை அவர் காலம் பூராவும் அவரே துவைத்துக் கட்டினுர். பொருள் வசதி மிகுந்த காலத்திலே கூட காந்திய முறையில் மிக எளிய வாழ்க்கையையே அவர் வாழ்ந்தார். ஆடம்பரங்களும், பணபகட்டை வெளிப்படுத்தும் செயல்களும் அவர்மனதை என்றுமே கவர்ந்தது கிடையாது. பிறகு 1962ல் மலேயாவை விட்டு இந்தியா வந்த பிறகு அவர் நமது ஆனந்தாஸ்ரமத்தில் ஆன்ம சாதகத்தை தொடர்ந்து செய்வதையே வாழ்க்கையின் முழு மூச்சாகக் கொண்டார். நெரூர் கைலாச ஆசிரமம் ஸ்தாபகர் **தவத்திரு. சதா சிவானந்த சுவாமிகள்** அவர்களைக் கொண்டு தொடர்ந்து அந்தர் யோகங்களை நடத்திஞர். காலையில் தவருது ஆனந்தாஸ்ரமத்திற்கு வந்திருந்து ஜபதபங்களில் ஈடுபடுவார். மாலே வேலேகளில் சற்சங்கங்களைத் தினசரி நடத்தி வந்தார்.

அவரது விவேக வைராக்கியங்களேப் பற்றி அவருடன் கூட்டு வழிப்பாட்டில் ஈடுபட்ட ஆனந்தாஸ்ரம அன்பர்கள் பலருக்கு நன்ருகவே தெரியும். அவர் பூத உடலுடன் இருந்த காலம்வரை அவருடைய வணிக கடமைகளிலும் ஈடுபட்டு வந்தார். எனினும் அவர் இந்த வியாபார காரியங்களே நிஸ்காமமாகவே செய்தார் என்பது மிக உறுதி. இதற்கு ஒரு நிகழ்ச்சியை உதாரணமாகக் கூறலாம். ஒருமுறை நமது பரம குருநாதர் தவத்திரு சதாசிவானந்த சுவாமிகளுடன் சேலம் மாவட்டம் ஆத்தூர் அருகிலிருக்கும் பெத்த நாயக்கன்பாளையம் என்னும் ஊரிலுள்ள மடத்தின் குரு பூஜைக்கு அவர் சென்று இருந்தார். குருபூஜை முடிந்து புறப்பட மாலே வேலே ஆகிவிட்டது. அப்போது சுவாமிகளும் அவரும் காரில் புறப்பட்டு காரில் திரும்பி வரும்போது அவர் கார் டிரைவரை மிக வேகமாக காரை விடச்சொல்லி எப்படியாவது 5-30 மணிக்குள் ஆனந்தாஸ்ரமம் அடைந்து விட வேண்டுமென்று மிகவும்விரட்டிக் கொண்ருடிந்தார். காரும் புதுக்காரானதால் சீறிப்பாய்ந்து சாதாரணமாக 1-45 மணி நேரத்தில் செய்யவேண்டிய பிரயாணத்தை 1-15 மணி நேரத்திலேயே முடித்துக் கொண்டு 5-30 மணிக்குள் ஆனந்தாஸ்ரமம் வந்து சேர்ந்துவிட்டது. இதைக் கண்டு வியந்து போன தவத்திரு சதாசிவானந்த சுவாமிகள் வேகமாக பிர

யாணம் செய்வதால் விளையக்கூடிய அபாயங்களையும் லட்சியம் செய்யாது இவ்வளவு வேகமாக எதற்காக காரை விடச் சொன்னீர்கள் என்று அவரைக் கேட்டார். அதற்கு அவர் மறு மொழியாக சொன்ன பதில்: ''ஆஸ்ரமத்தில் கழிக்கும் நேரம்தானே எனக்காக நான்செலவிடும் என் சொந்தநேரம் அதையும் இழந்து விட்டால் எனக்கு பெரும் நஷ்டமாகி விடும் அல்லவா?'' இதுவே அவர் அளித்த பதில். இதிலிருந்து அவர் தான் என்று கூறியது தன்னுடைய ஆத்மாவைத்தான் என்பதையும், அந்த ஆத்ம லாபத்திற்காக செலவிடும் நேரமே அவருடைய சொந்த நேரம் என்பதில் தெளிவாக இருந்ததையும், ஏனையவியாபார குடும்ப நிமித்தம் அவர் செலவிடும்நேரங்கள்எல்லாம் அவருடையசொந்தநேரம் அல்ல என்ற கருத்தில் இருந்ததையும் நாம் அருறிய முடிகிறது. இதனை தவத்திரு சதாசிவானந்த சுவாமிகள் அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்லி நாராயண சரஸ்வதி சுவாமிகளின் உயர்ந்த மனோநிலையை மிகவும் பர்ராட்டி மகிழ்வார்.

ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகள் எந்த வேலையைச் செய்தாலும் மிகவும் நேர்த்தியாகவும் முழுமையாகவும் செய்து முடிப்பார் 1969ல் மகாத்மா காந்தியின் நூற்றாண்டு விழா வந்தபோது காந்தி மன்றத்தினர் மகாத்மாவின் போதனைகள், வாழ்க்கை நிகழ்ச்சிகள் எல்லாம் அடங்கிய மிகப்பெரிய பத்து புத்தகங்களை வெளியிட்டனர். ஒவ்வொரு புத்தகத்திலும் சுமார் 800 முதல் 1000 பக்கங்கள் இருக்கலாம். அத்தனை புத்தகங்களையும் அவர் வாங்கி படிக்க ஆரம்பித்து அலுவலக நேரங்களிலும் ஏனைய ஓய்வு நேரங்களிலும் கிரமமாக படித்து சில ஆண்டுகளில் முழுமையாக படித்து முடித்தார். சிறு புத்தகம் ஒன்றை வாங்கினாலும் அதை முழுமையாக படித்து முடிக்காமல் அரைகுறையிலேயே விட்டுவிடும் என்னைப்போன்றவர்களுக்கு அவர் அந்த வயதிலும் அத்தனை பக்கங்களையும் விடாமல் படித்து முடித்த நேர்த்தி மிக மிக வியப்புக்கு உள்ளாக்கியது

53-1

அவருடைய காலத்தின் இறுதி பகுதிகளில் அதுவரை தனக்கு இருந்து வந்த பணத்தாசைகள் அவர் மனதை விட்டு நீங்கி விட்டன என்பதை குறிப்பாக உணர்த்தினர். என் போன்றவர்களுக்கும் பணத்தை இழப்பதினல் ஏற்படும் நஷ்டம் பெரிய நஷ்டமல்ல என்பதை வாயுரையாகவே விளக்கினர்.

வேத வேதாந்தகளேயும் அறவழி நூல்களேயும் மகான்களின் சரித்திரங்களேயும் நாம் படிக்கும்போது அதில் குறிப்பிட்டு இருப்பவைகளின்படி ஒரு மனிதன் நடைமுறையில் வாழ்ந்து காட்ட முடியுமா, அந்த மகான்கள் வாழ்க்கையில் செய்து காட்டியதாக சொல்லப்படுவது எல்லாம் உண்மை தானு என்ற ஐயம் நம்மில் பலருக்கு ஏற்படுவது இயல்பு. துறவிகளில் இமயம் போன்று உயர்ந்து நின்ற சுவாமி விவேகானந்தரே பல ஆண்டுகள் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணருடன் பழகிய பிறகு ஸ்ரீ ராமகிருஷ்ணரின் இறுதி வாழ்நாள் சமயத்தில் சிறிது ஐயத்துடன் அவரை நோக்கி ''ஐயனே, உண்மையில் நீங்கள் யார்? என்று கேட்டார். அதற்கு பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் ''இன்னுமா உனக்கு ஐயம்? அன்று ராமனாகவும் பிறகு கிருஷ்ணனாகவும் யார் வந்தாரோ அவரே இன்று ராமகிருஷ்ணராக வந்திருக்கிறேன்'' என்று பதில் அளித்தார் ஞானச் சுடரான சுவாமி விவேகானந்தருக்கே இத்தகைய ஐயங்கள் அவ்வப்போது ஏற்பட்டிருக்கின்றன எனில் சாதாரண பாமரர்களாகிய நம் போன்றவர்கள் எம் மாத்திரம்? ஆனல் பரம கருணு மூர்த்தியாகிய கடவுள் இத்தகைய ஐயங்களே நீக்குவதற்கு அவதார புருஷர்களேயும் மகான்களேயும் நாட்டிற்கு அனுப்பி வைப்பதுபோல், இன்று இவ்வூரில் இக்காலத்தில் நம்மிடையே வாழ்ந்த ஸ்ரீலஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகளின வாழ்க்கை நமக்கு ஐயங்களே போக்க உறுதுணை புரியும். ஸ்ரீ விதுர நீதிகள் என்னும் இந்நூலில் கூறியுள்ளபடி நடைமுறையில் ஒரு மனிதனல் வாழமுடியும் என்பதற்கு ஸ்ரீ நாராயண சுவாமிகளின் வாழ்க்கையே ஒரு சான்ருக எடுத்துக் காட்டலாம். இத்தகைய பெரியோர்கள் அன்றும் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் நமது ஆனந்தாஸ்ரமத்தில் ஆன்மீக வேள்வி தொடர்ந்து நடைபெறும் என்பதற்கு எந்த ஒரு ஐயமும் இல்லை. அதற்கு என்றும் உறுதுணையாக ஆசிரம தலேவரும் எனது தகப்பஞ

ருமாகிய உயர்திரு V. R. S. இராமசாமி செட்டியார் அவர்களும் துணைத் தலைவராகிய J. K K முனிராஜா செட்டியார் அவர்களும் மற்றும் ஏனைய ஆன்மீகமாணார்க்கர்களும் அன்பர்களும் தொடர்ந்து ஆசிரமத்தின் நற்காரியங்களில் ஈடுபட்டு வருவது அனைவரும் அறிந்ததே. எல்லாம் வல்ல இறைவன் நம் அனைவருக்கும் சர்வ் துக்க நிவர்த்தி பரமானந்த பிராப்த்தியாகிய அந்த பெரும் பயனை அளித்து அருள் புரிய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

உரிமையாளர்
ஸ்ரீ ஆண்டாள் & கம்பெனி
குமாரபாளையம்
சேலம் மாவட்டம்

இப்படிக்கு,
ஆர். எஸ். ராஜு B.E,
29-05-1992

உ சிவமயம்

அறிவிப்பு.

குமாரபாளையம் எடப்பாடி ரோட்டிலிருக்கும் நமது ஆனந்தாஸ்ரமத்தில் கோவிலூர் மரபு தவத்திரு. **சோம. கோபாலசுவாமி** அவர்களால் தினந்தோறும் மாலை 7-00 முதல் 8-00 மணிவரை கோவிலூர் மடம் வேதாந்த சம்பிரதாய பாடங்களான; 1. நாநா ஜீவ வாதக் கட்டளை 2. கீதா சாரத் தாலாட்டு 3. சசி வன்னபோதம் 4. மகாராஜாத் துறவு 5. வைராக்கிய சதகம், 6. வைராக்கிய தீபம், 7. இலட்சணு விருத்தி 8. வேதாந்த சூடாமணி 9. கைவல்லிய நவநீதம், 10. விவேக சூடாமணி 11. ஸ்ரீ மத் பகவத் கீதை, 12. ஸ்ரீ மத் ஈசுவர கீதை, 13. ஸ்ரீ மத் பிரம்ம கீதை, 14. அஞ்ஞவ்தைப் பரணி 15. ஸ்ரீ பஞ்சதசி ஆக 15-சாஸ்திரங்களும்; 1-11-1985 முதல் 28-11-1990-ம் தேதிவரை வரிசைக் கிரமமாக நடத்தப்பட்டு முடிந்தன. 29-11-1990-ம் தேதிமுதல் பரமாத்வை தத்தை போதிக்கும் 16-வது சாஸ்திரமான ஸ்ரீ ஞான வாசிட்டம் நடத்தப்பெற்று 1-5-1992-ம்நாள் நிறைவு பெற்றது.மற்றும் டி தேதிக்குள் சீடாசாரம் தோத்திரப்பாக்கள் திரட்டு, ஸ்ரீ இராமசாமி சுவாமிகள் அருளிய ''அருள் மொழிகள்'' ஏழு பாகங்கள், திருக்குறள், தசோ உப நிசத்துகள், கந்தர் அனுபூதி, பேரின்பத்திற்குத் தடையும் நடையும், திருவிளையாடல் புராணச் சுருக்கம், பெரிய புராணச் சுருக்கம், பஜ கோவிந்தம் திருப்பாவை, திருவெம்பாவை, இன்ன நாற்பது, ஆகிய துணைப் பாடங்களும் நடத்தப்பட்டு முடிந்துள்ளன. இப்பொழுது ''அவிரோத உந்தியார்'' 27-4-1992-ம் தேதி முதல் நடைபெற்று வருகிறபடியால், ஆன்மீக நாட்டமுள்ள அன்பர்கள் இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் புருஷார்த்த இலட்சியங்களில் முக்கிய இலட்சியமான சர்வ துக்க நிவர்த்திப் பரமானந்தப் பிராப்த்திருபப் பயனும் வீடு பேற்றை அடைந்து உய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு,

J. K. K. முனிராஜா M. TECH. (London) UK

உப தலைவர், ஆனந்தாஸ்ரமம்

கொமாரபாளையம்-638183. சேலம்-மாவட்டம்.

தாளம் ஆதி

ஏழு மலையானை எண்ணித்துதிப் போர்க்கு என்ற மெட்டு

ஆனந்த ஆசிரமத்தில் அத்வைத பாடம் கேட்டால்
நம் கவலை யாவும் நம்மை விட்டுப்போகும் :-
அனுதினமும் [ஆனந்த]

உயர்நலைவர் முன்னிருக்க உபதலைவர் உடனிருக்க.
கோவிலூர் மரபு வழி கோபால சுவாமி இடம் [ஆனந்த

சஞ்சலம் போக்கிவிடும் திட உள்ளம் ஆக்கிவிடும்
புலம்பலைப் போக்கிவிடும் பேரானந்தம் தந்திடும்
[ஆனந்த]

இம்மை மறுமை தனை இயல்பாக எடுத்துரைத்து
மானிட வாழ்க்கையின் வளமான வழிப்படுத்தும்
[ஆனந்த]

கவி கூறும்கந்தசாமி களிப்புடனே போற்றும்
வடகோவிலூர் என்ற மறுபெயர் பெற்று விட்ட
(ஆனந்த)

V. T. K. ராஜு (எ) V. T. கந்தசாமி (நாமக்காரர்)
மாணவன் ஆனந்தாஸ்ரமம்
குமாரபாளையம் - 638 183

கொமாரபாளையம்
ஆனந்தாஸ்ரமம்
முதலாவது தலைவர்



ஸ்ரீ நாராயண சரஸ்வதி சுவாமிகள்

அவதாரம் : 1901 மகா சமாதி : 9—6—1980

உ
சிவமயம்

ஸ்ரீ விதுரர் அருளிய நீதி மொழிகள்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுள் நாடு.

மலர்தலை உலகில் எந்நாட்டினும் மிக்க நன்னுடாம் நம் பாரத தேசத்திலே துவாபர யுகம் முடிவில் சந்திரகுல வமிசத்தில் தோன்றிய பாண்டு புத்திரர்களான பாண்டவர்களின் நாட்டை தீயவழியில் அபகரித்த திருதராட்டிரபுத்திரன் துரியோதனன் நீதிக்கும் நேர்மைக்கும் புறம்பாக நாட்டை திருப்பித் தரமுடியாது எனக் கூறிவிட்டான். அதை ஆதரித்து ஷ திருதராட்டிரன் சஞ்சயனைத் தூது அனுப்பி "எப்படியாவது பாண்டவர்களை மீண்டும் காட்டிற்குப்போக இதமாகக் கூறிவா" என்று அனுப்பினுன் அவ்வாறே சென்ற சஞ்சயன் தனது எண்ணம் பலிக்கவில்லை என்று திரும்பி வந்து திருதராட்டிரனிடம், "வேந்தரே! பாண்டவர்கள் எப்போதும் அறத்தின் நுட்பத்தை அறிந்து நடக்கிறுர்கள். அவர்களைப் பகைக்கின்றவர்கள் நெருப்பிஞல் எரிகின்ற பஞ்சுக் குளியலைப் போல் எரிந்து விடுவார்கள் மிகுதியை நாளை அரசபையில் வந்து கூறுவேன்." என்று சொல்லிவிட்டுச் சென்றுன். இதைக் கேட்ட திருதராட்டிரன் உறக்கம் இன்றித் தவித்தான். விதுரரை அழைத்து என் அருமைத் துணைவனே! என் மனம் அளவுக்கு மிஞ்சித் துக்கப் படுகின்றது. இப்போது மனச்சாந்திக்கான சுருதி யுத்தி அனுபவத்திற்கு ஒத்ததான மொழிகளைக் கூறுவாயாக என்று [ஸ்ரீ வியாசபகவனுல் அருளிச்செய்யப்பட்ட ஐந்தாவது வேதமெனப் புகழப்படும் ஸ்ரீ மகாபாரதத்தின் 5-வது உத்தியோக பருவத்தில்] கேட்டுக் கொண்டதற்கிணங்க ஸ்ரீ விதுரரால் அருளிச் செய்யபட்ட நீதி மொழிகள் (முதல் பாகம்) இவை பண்டிதர் முதல் பாமரர் வரைக்கும், அரசன் முதல் ஆண்டி வரைக்கும் பயன் படுவன ஆகும், அவை வருமாறு:

ஸ்ரீ விதுரர் அருளிய

ஸ்ரீ விதுரர் கூறினார் :

பலமுடையவனால் வெல்லப்பட்ட பலமும், உதவியு மற்றவன், சொத்தையெல்லாம் பறிகொடுத்தவன், காமம் பொருந்தியவன், கள்வன் ஆகிய இவர்களுக்குத் தூக்கமின் மை ஏற்படுகிறது. 1

அரசரே! இந்தப் பெரிய குற்றங்களுடன் உனக்குச் சம்பந்தமில்லையா? பிறருக்குச் சேர்ந்த சொத்தை விரும்பிக் கொண்டு நீர் கஷ்டப்படவில்லையா? 2

த்ருததராஷ்டிரர் கூறினார் ;

உயர்ந்த நன்மை தரும் அறம் பொருந்திய உனது சொற்களைக் கேட்க விரும்புகிறேன். இந்த ராஜரிஷியின் குலத்தில் நீர் ஒருவர்தான் அறிவுடையவர். 3

ஸ்ரீ விதுரர் உரைத்தார் :

த்ருதராஷ்டிரரே! அரசனின் இலட்சணங்கள் உள்ள யுதிஷ்டிரன் மூவுலகங்களுக்குத் தலைவனாக வேண்டும். அவர் மன்னனாக அழைக்கப்படுவதற்குத் தகுதியுடைவர். ஆனால் உம்மால் காட்டிற்கு அனுப்பப்பட்டார். 4

அவருக்கு நேர் மாறாக உள்ளவர் நீர்! நீர் தர்மாத்மா வாகவும், தர்மத்தை அறிந்தவராகவும் இருந்தாலும் கண் பார்வையிழந்ததனால் அரச குலத்தில் அரசனாக இருப்பதற் குத் தகுதியுடையவரில்லை. 5

குரூரத் தன்மை இல்லாததனாலும், கருணையிருப்பதி னாலும், தர்மத்தில் ஈடுபாடுள்ளதாலும், உண்மை பேசுவத

நீதி மொழிகள்

ஞலும், பராக்கிரமம் உள்ளதனுலும், உன்னிடத்தில் மதிப்பு வைத்திருப்பதனுலும் அவர் பல கஷ்டங்களைப் பொருத்துக் கொண்டிருக்கிருர். 6

துரியோதனன், ஸௌபலன், கர்ணன் மற்றும் துச்சாதனனிடம் அரசுப் பொருப்பைக் கொடுத்துவிட்டு நீ செழிப்பை எவ்வாறு எதிர்பார்க்க முடியும் 7

ஆத்மஞானம், முயற்சி, பொறுமை, அறச்சிந்தனை என்பவைகள் எவரைப் புருஷார்த்தத்திலிருந்து விலகிச் செல்லாதவாறு வழி நடத்துகின்றனவோ அப்பேற்பட்டவர் பண்டிதர் எனப்படுவார். 8

(முன்னேர்களால்) பாராட்டப்பட்ட செயல்களைச் செய்வது, நிந்திக்கப்பட்ட செயல்களைச் செய்யாமலிருப்பது நாஸ்திகனுக இல்லாமலிருப்பது, சிரத்தையுடையவனுக இருப்பது இவை—பண்டிதனின் இலட்சணங்களாகும் 9

கோபம், இன்பம், அகந்தை, போலியான அடக்கம் மூடத்தன்மை, கர்வம் ஆகிய இவை எவரைத் தன் இலட்சியத்திலிருந்து நழுவச் செய்வதில்லையோ அவர் பண்டிதராவார். 10

எவரது செய்யப்படப் போகின்ற செயலையும், திட்டத்தையும் மற்றவர்கள் அறிவதில்லையோ, மேலும் எவர் செய்ததை மட்டும் மற்றவர் அறிகின்றனரோ அவரைப் பண்டிதர் என்று கூறுவர், 11

எவர் செய்யவிருக்கும் செயலைக் குளிர்ச்சி சூடு, பயம் பற்று, செழிப்பு, வறட்சி போன்றவை தடுப்பதில்லையோ அப்பேற்பட்டவர் பண்டிதர் ஆவார். 12

ஸ்ரீ விதுரர் அருளிய

எவரது இயற்கையான லௌகீத அறிவு அறத்திற்கும் பொருளிற்கும் உடன்பாடாய் உள்ளதோ மேலும் எவர் இன்பத்தைக் காட்டிலும் பொருளை விரும்புகிறாரோ அவர் **பண்டிதர்** என்று அழைக்கப் பெறுகிறார். 13

எவர்கள் தம் சக்திக்கேற்றவாறு (செயலைச்) செய்ய விரும்புகின்றனரோ, சக்திக்கு மீறிச் செய்வதில்லையோ மேலும் எதையும் அலட்சியப்படுத்துவதில்லையோ அவர்கள் **பண்டிதர்கள்** 14

எவன் சீக்கிரமாகப் புரிந்துகொள்கிறானோ, நீண்ட காலம் சொல்வதைக் கேட்கின்றானோ, பொருளைக் காமத்தினாலல்லாமல் புரிந்துகொண்டு அனுபவிக்கிறானோ, கேட்கப் படாவிட்டால் பிறரது செயல்களில் ஈடுபடுவதிலலையோ அப்பேற்பட்டவனின் அறிவு **பண்டிதனின்** உயர்ந்த அறிவாகும் 15

எந்த மனிதர்கள் அடைய முடியாதவற்றை விரும்புவதில்லையோ, அழிந்ததைப் பற்றி சிந்திப்பதில்லையோ மேலும் கவலைகளால் மோஹம் அடைவதில்லையோ அப்பேற்பட்டவர்கள் **பண்டிதர்கள்** ஆவார்கள். 16

எவன் முடிவு செய்து செயலைத் தொடங்குகின்றனோ, நடுவில் தயங்குவதில்லையோ, மேலும் காலத்தை வீணாக்குவதில்லையோ அத்தகைய தன் வசமான மனதுடையவன் **பண்டிதன்** என அழைக்கபடுகின்றான், 17

பரதகுலத்தின் காளையே! எவர் நல்லோர்களின் செயல்களில் ருசி காண்கின்றனரோ, நன்மை தரும் செயல்களைச் செய்கின்றனரோ, நல்லவற்றைப் பார்த்து பொறாமை படுவதில்லையோ அவர்கள் **பண்டிதர்கள்!** ஆவர். 18

நீதி மொழிகள்

புகழ் பெறும்போது மகிழ்ச்சியும், அவமானத்தினுல் துன்பமும் பெருமல் எவர் கங்கையாற்றின் தடாகத்தைப் போல் அசையாமல் இருக்கின்ருரோ அவர் பண்டிதர் எனப்படுவார். 19

எவர் எல்லா பூதங்களின் அழிவடையும் தத்துவத்தை யும், செயல்களின் தொடர்புகளையும், மனிதர்கள் தாம் விரும்பியவற்றைச் சாதிக்க மேற்கொள்ளும் வழிகளையும் அறிந்துள்ளாரோ அப்பேற்பட்ட மனிதர் பண்டிதர் எனப்படுகிருர். 20

எவர் திறைமையுடன் பேசுகின்ருரோ, பல விஷயங் களை அறிந்துள்ளாரோ, யுத்தி உடையவரோ, தகுந்த காலத்தில் தோன்றும் அறிவுடையதரோ, தகுந்த காலத்தில் தோன்றும் அறிவுடையவரோ, நூலை உடனே விளக்குப வரோ அப்பேற்பட்டவர் பண்டிதராவார். 21

எவருடைய கற்ற பாடங்கள் புத்தியை ஒத்து உள்ள னவோ, மேலும் எவருடைய அறிவு சாஸ்திரங்களுக்கு உடன்பாடாய் உள்ளதோ, மேலும் எவன் நல்லோர்களுக்கு மரியாதை செலுத்தாமலிருப்பதில்லையோ அவன்பண்டிதன் என்னும் பெயரை அடைகிருன். 22

எவன் சாஸ்திரத்தை அறியாமலிருந்தாலும் தன்னை அறிவாளி என்று நினைத்துக் கொண்டிருக்கின்ருனோ, எவன் தரித்திரனுக இருந்தாலும் கர்வமுள்ளவனுக இருக்கிருனோ, மேலும், எவன் கெட்ட செயல்களால் பொருட்களை அடை கின்ருனே அப்பேற்பட்டவன் அறிவாளிகளால் மூடன் என்றழைக்கப்படுவான். 23

எவன் தனக்குச் சேர்ந்ததை விட்டுவிட்டு மற்றவர் களுடையவற்றுடன் சம்பந்தம் வைத்துக் கொள்கிறானோ மேலும், எவன் தன் நண்பர்களுக்காக ஏமாற்று வழிகளை மேற்கொள்கின்றானோ அப்பேர்பட்டவன் மூடன் எனப் படுகின்றான். 24

விரும்பக்கூடாததை எவன் விரும்புகின்றானோ விரும்பப்பட வேண்டியதை விட்டு மேலும் பலமுடை யவனை வெறுக்கின்றானோ அப்பேற்பட்டவனை மூடமதி என்று கூறியுள்ளார்கள், 25

எவன் எதிரியை நண்பனாகக் கருதுகிறானோ நண்பனை வெறுத்து துன்பப்படுத்துகின்றானோ மேலும் கெட்ட செயல் களைத் தொடர்கிறானோ அப்பேற்பட்டவனை மூடமதி என்று கூறியுள்ளனர். 26

பரதகுலத்தின் காளையே! எவன் தனது திட்டங்களை யெல்லாம் வெளியே பரப்பி விடுகின்றானோ, எல்லா விஷயத் திலும் சந்தேகப்படுகிறானோ, சீக்கிரமாகச் செய்ய வேண்டி யதை தாமதப்படுத்துகிறானோ அவன் மூடன் என்று அழைக் கப்படுகின்றான். 27

எவன் மூதாதையர்களுக்குச் சிரார்த்தம் செய்வதில் லையோ, தேவதைகளை வழிபடுவதில்லையோ, தன் நன்மையை மனதில் வைத்திருக்கும் நண்பனைப் பெறுவதில்லையோ, அப் பேற்பட்டவனை மூடமதி என்று கூறியிருக்கிறார்கள். 28

மனிதர்களில் கீழ்த்தரமான மூடமதி அழைக்கப்படா மல் உள்ளே செல்கின்றான். கேட்கபடாமல் அதிகமாகச் செய் கின்றான். யாரிடத்தில் விஸ்வாசம் அதிகமாக வைக்கக் கூடாதோ அவர்களிடத்தில் வைக்கின்றான். 29

தன்னிடத்தில் குற்றம் இருந்தாலும் எவன் பிறரிடம் குற்றம் சாட்டுகின்ருனே, தனக்குச் சக்தியில்லாவிட்டா லும் கோபப்படுகின்ருனே அவன் **மூடர்களில்** தலையாய **மூடன்.** 30

எவன் தனது சக்தியை அறிந்து கொள்ளாமல் தர் மத்திற்கும், அர்த்தத்திற்கும் சம்பந்தப்படாத-அடைய முடி யாத பொருளை முயற்சி செய்யாமல் விரும்புகின்ருனே அவன் இங்கு **மூடமதி** என்று அழைக்கப்படுகின்ருன். 31

அரசனே! எவன் நிரபராதிக்குத் தண்டனை தருகின் ருனே, சூன்யத்தை உபாஸக்கின்ருனே மேலும் கஞ்சனை நாடுகின்ருனே, அவனைக் **மூடமதி** என்று கூறியுள்ளனர். 32

எவன் மிகுந்த செல்வதையோ, கல்வியையோ, வளத்தையையோ பெற்றும் கர்வமுடையவனுக இல்லையோ அவன் **பண்டிதன்** எனப்படுகிருன். 33

எவன் தனித்து உண்கிருனே, வேலைக்காரர்களுக்கு ஒன்றும் கொடுக்காமல் ஆடைகளை அணிந்து கொள்கிருனே அப்பேற்பட்டவனைக் காட்டிலும் **கல்நெஞ்சமுடைய வன்** யார்? 34

ஒருவன் பாவத்தைச் செய்கின்ருன்; பலனை மஹா ஜனங்கள் அனுபவிக்கின்றனர். அனுபவித்தவர்கள் பாவத் திலிருந்து விடுபடுகின்றனர். ஆனுல் பாவத்தைச் செய்தவன் அக்குற்றத்தால் பாதிக்கப்படுகிருன். 35

வில்லுடையவனுல் விடப்பட்ட அம்பு ஒருவனைக் கொல்லலாம் அல்லது கொல்லாமலிருக்கலாம், ஆனுல் புத்தி யுடையவன் தனது புத்தியை தவருக உபயோகித்தானென் ருல், அவன் அரசனேடு கூடிய ராஜ்ஜியத்தை நாசம் செய் கின்ருன். 36

ஒன்ருல் (புத்தி மூலமாக) இரண்டை (நல்லவற்றை யும், தீயவற்லையும்) முடிவு செய்து, நான்கால் (தட்டிக் கொடுத்தல், தானம் செய்தல், வேற்றுமை உண்டாக்குதல் தண்டனையளித்தல் இவைகளால்) மூன்றை (நண்பன், பற் றற்வன், எதிரி இவர்களை) வசப்படுத்தி, ஐந்தை [ஐம்புலன் களை] வென்று, ஆறை (உடன்படிக்கை, போர் முதலியவை களை) அறிந்து, ஏழை [பெண், சூதாட்டம், வேட்டை, கடூ ரமான வார்த்தைகள், குடித்தல், கடுமையான தண்டனை, செல்வத்தை வீணக்குதல் முதலியவற்றை] விட்டு விட்டு, சந்தோசமாக இரு. 37

விஷம் ஒருவனைக் கொல்கிறது. அஸ்திரத்தால் ஒருவன் மரணம் அடைகின்ருன். ஆனுல் தீய ஆலோசனை அரசனை யும், அரசாங்கத்தையும், மக்களையும் அழிக்கிறது, 38

சுவையுள்ளவற்றை மட்டும் சாப்பிடக்கூடாது. சாதி க்க வேண்டியதை ஒருவன் மட்டும் சிந்திக்கக்கூடாது. யாத் திரைக்குத் தனியாகச் செல்லக் கூடாது. மற்ற எல்லோரும் தூங்கும்போது விழிந்துக் கொண்டிருக்கக் கூடாது. 39

அரசனே! தன்னிகரற்றதாக விளங்கும் ஒன்றை [தர்மத்தை] நீ அறியவில்லை. உண்மை (தர்மம்) கடலைக் தாண்டுவதற்கு உள்ள படகைப் போல், ஸ்வர்கத்தை [சுக த்தை] அடைவதற்கு படியாய் உள்ளது. 40

பொறுமையுள்ளவருக்கு ஒரே குறைதான் உள் ளது. இரண்டாவது குறை இல்லை. பொறுமையுள்ளவனை மக்கள் சக்தியற்றவன் என்று நினைக்கிருர்கள், அதுவே குறை

பொறுமையுள்ளவனிடம் இத்கைய குறை உள் ளது என நினைக்கக் கூடாது. ஏனென்ருல் பொறுமை உயர் ந்த பலம் ஆகும். சக்தியற்றவர்களுக்கு அது அணி கலனுகும். 42

பொறுமை உலகை வசப்படுத்துகிறது. பொறுமையால் எதைத்தான் அடைய முடியாது? அமைதி என்னும் வாளைக் கையில் ஏந்தியவனைத் தீயவன் என்ன செய்ய முடியும்? 43

புல்லில்லாத இடத்தில் விழும் நெருப்பு தானே எரிந்து அணைந்து விடுகிறது; [அதே போல்] பிறரை மன்னிக்காத மனிதன் குற்றங்களைத் தன் மேலேயே ஏற்றுக் கொள்கிறான். 44

தர்மமே உயர்ந்த நன்மை. பொறுமை ஒன்றே உத்தமமான அமைதி. அறிவே உயர்ந்த திருப்தி. அஹிம்சையே சுகத்தைதரக் கூடியது. 45

எவ்வாறு பாம்பு ஓட்டைகளுக்குள் உள்ள பிராணிகளைச் சாப்பிடுகின்றதோ அதே போல் பூமி, போராடுவதற்குச் சாமர்த்தியமில்லாத அரசன், தீர்த்த யாத்திரை செய்யாத பிராஹ்மணன் ஆகிய இருவரையும் சாப்பிட்டு விடுகிறது. 46

கடூரமான சொற்களைப் பேசாமலும், தீயவர்களை இலட்சியப்படுத்தாலும் இருக்கும் மனிதன் இவ்வுலகில் கீர்த்தியைப் பெறுகிறான். 47

மனிதர்களில் புலியே! ஒருவன் மற்ற பெண்மணிகளால் விரும்பப்படுகிறான் என்பதற்காக அவனை விரும்புகின்ற பெண்மணிகளுக்கும், ஒருவன் மற்றவர்களால் பூஜிக்கப்படுகிறான்; என்பதற்காக அவனைப் பூஜிப்பவர்களுக்கும் சுய புத்தியே கிடையாது. 48

தரித்திரனின் ஆசையும், சக்தியற்றவனின் கோபமும்- ஆகிய இவையிரண்டும் உடலைத் துன்பப்படுத்தும் கூர்மையான முட்களாகும். 49

உலகியல் வாழ்வுக்காக முயற்சி செய்யாத கிரஹஸ்தனும், செயல்களில் ஈடுபடும் ஸந்நியாசிகளும் - ஆகிய இருவரும் பொருந்தாத செயல்களால் சிறந்து விளங்குவதில்லை 50

அரசனே! பொறுமையோடு கூடிய செல்வாக்குடையவன், தானம் செய்யும் ஏழை-ஆகிய இவ்விருவரும் ஸ்வர்கத்திற்கும் மேலான நிலையில் இருக்கிறன்றனர். 51

தகுதியில்லாதவனுக்குக் கொடுப்பதும் தகுதியுள்ளவனுக்குக் கொடுக்காமல் இருப்பதும்-ஆகிய இவையிரண்டும் நியாயமாகக் கிடைத்த செல்வத்தின் துர் உபயோகம் ஆகும். 52

செல்வந்தனுயிருப்பினும் தானம் செய்யாதவனையும், ஏழையாயிருந்து தவம் செய்யாதவனையும்-(ஆகிய இருவரையும்) அவர்களுடைய கழுத்தில் கல்லைக் கட்டி கடலில் போட வேண்டும். 53

யோகத்தை அடைந்த ஸந்நியாசியும், போரில் எதிரியை நோக்கியவாறு முன் கொல்லப்பட்டவனுமாகிய இருவரும் சூர்ய மண்டலத்தையே துளையிட்டு விடுகின்றனர். 54

பரதர்களில் காளையே! மனிதர்களுக்கு மூன்று வழிகள் உள்ளன என்று வேதங்களில் கூறப்பட்டுள்ளன. அவை கீழ்த்தரமானது – மத்தியமானது—உயர்ந்தது என்று வேதத்தை அறிந்தவர்கள் கூறுகிறார்கள். 55

மன்னா! மனிதர்களும் கீழ்த்தரமானவர்கள்—மத்தியமானவர்கள்—உயர்ந்தவர்கள் என்று மூவகையாக உள்ளனர். அவர்களைப் பொருத்தமான செயல்களில்தான் ஈடுபடச் செய்ய வேண்டும். 56

மனைவி—அடிமை—புதல்வன் ஆகிய மூவருக்குச் செல்வம் கிடையாது. அவர்கள் எவற்றை அடைகின்றனரோ அவையனைத்தும் இம்மூவரும் சேர்ந்திருப்பவனிடத்தில் அடையும். 57

மற்ருருவனுக்குச் சேர்ந்தவற்றைத் திருடுவது பிற, னின் மனைவியைக் கெடுப்பது, நன்மையை விரும்புபவர்களை கைவிட்டுவிடுவது, ஆகிய இம்மூன்று குற்றங்களும் நாசத்தைக் கொடுக்கின்றன. 58

காமம், குரோதம், லோபம் ஆகிய இவை மூன்றும் ஒருவனுடைய நரகத்திற்குக் கதவுகள் போல் விளங்குகின்றன, ஆகவே இவை மூன்றையும் (ஒளிவன்) விட்டுவிட வேண்டும், 59

வரத்தைத் தருவது, அரசைப் பெறுவது, புதல்வனின் பிறப்பு ஆகிய இம் மூன்றிலும் வரும் புண்ணியம், எதிரிக்கு துன்பத்திலிருந்து விடுதலை அளிப்பதால் ஏற்படக்கூடிய புண்ணியத்திற்கு சமம். 60

தன்னை ஸேவிக்கும் பக்தன், ''நான் உங்களுக்குச் சேர்ந்தவன்'' என்று கூறுபவன், தன் வீட்டிற்கு வந்தவன் ஆகிய அடைகலமடைந்த மூவரையும் கஷ்ட காலத்தில் கைவிடக் கூடாது. 61

மந்த புத்தியுள்ளவன், தாமதம் செய்பவன், முயற்சி செய்யாதவன், வெறுமெனப் புகழ்பவன் ஆகிய நால்வரின் அறிவுரையைக் கேட்கக் கூடாது, பலசாலியாயுள்ள மன்னனும் இந்நால்வரையும் விட்டு விட வேண்டும் என்பதைப் பண்டிதன் அறிந்துள்ளான். 62

செல்வந்தனுகவும், கிருஹஸ்த தர்மத்துடன் இருக்கும் உமது இல்லத்தில்; வயதான உறவினர், தற்போது கஷ்டத்திற் குள்ளாயிருக்கும் நற்குலத்தினன், ஏழை நண்பன், குழந்தைப் பேறுல்லாத சகோதரி ஆகிய நால்வரும் வ்சிக்கட்டும்

பேரரசரே! இந்திரனுல் கேள்வி கேட்கப்பட்ட ப்ருஹஸ்பதி ஒரே நாளில் பலன் கொடுக்கும் நான்கினைப் பற்றிக் கூறினுர். அவைகளைப்பற்றி என்னிடத்திலிருந்து கேட்பீர்களாக! தேவதைகளின் ஸங்கல்பம், அறிவுடையவர்களின் திறன், கல்வி பெற்றவர்களின் அடக்கம், பாவம் செய்பவர்களின் அழிவு ஆகியவை இவை. 64

அக்னி ஹோத்ரம், மௌன விரதம், கல்வி சாதாரண மான யாகம் ஆகிய இவை நான்கும் பயத்தைப் போக்கு வதற்கு இருந்தாலும், தகுந்த வகையில் செய்யப்படாவிட் டால் பயத்தைத் தருகின்றன. 65

பரதர்களில் சுர்ளேயே! தந்தை, தாய், அக்னி, ஆத் மா, குரு ஆகிய இந்த ஐந்து அக்னிகளும் மனிதனுல் முயற்சி செய்து வழிபடப்பட வேண்டும். (பஞ்சாக்னி வித்தை) 66

தேவர்கள், முதையர்கள், மக்கள், ஸந்நியாசிகள், விருந்தினர்கள் ஆகிய ஐவரை பூஜித்ததனுல் உலகத்தில் மனிதன் புகழ் பெறுகின்முன். 67

நண்பர்கள், எதிரிகள், நடுநிலேயாளர்கள், காப்பவர் கள், நம்பி வாழ்பவர்கள் ஆகிய ஐவரும் நீர் எங்கு சென்ரு லும் உம்முடன் வருவார்கள். 68

மனிதனது ஐம்புலன்களில் ஏதாவது ஒரு புலனும் வசத்திற்கு வரவில்லேயென்ருல், தோலாலான பாத்திரத் த்திலிருந்து நீர் ஒழுகுவதைப் போல் அவனது அறிவு நிலேத் திருக்காது. 69

தூக்கம், சோம்பல், பயம், கோபம், சோம்பேரித் தனம், தள்ளிப் போடுதல் ஆகிய ஆறு குற்றங்கள் வளத்தை விரும்பும் மனிதனுல் நீக்கப்பட வேண்டும். 70

பாடத்தைச் சொல்லித் தெரியாத குரு, அத்யயனம் செய்யாத புரோஹிதன், காப்பாற்ருத மன்னன், கடின வசைகளேப் பேசும் மனேவி, கிராமத்தில் இருக்க விரும்பும் மாட்டுக்காரன், வனத்தை விரும்பும் நாவிதன்—இத்தகைய ஆறு மனிதர்களே சமுத்திரத்தில் உடைந்த கப்பலேப் போல் விட்டுவிட வேண்டும் 71

உண்மை, தானம், சோம்பலின்மை, பொருமையின்மை, பொறுமை, உறுதி இவை ஆறு குணங்களும், மனிதனால் என்றும் விடுபடக் கூடாது. 72

மன்னு! செல்வத்தைப் பெறுதல், எப்போதும் ஆரோக்கியத்துடன் இருத்தல், பிரியமாயும் இனிதாகவும் பேசும் மனைவி, அடங்கிய புதல்வன், செல்வத்தைத்தரும் கல்வி—ஆகிய இவை ஆறும் இவ்வுலகில் இன்பத்தைத் தருகின்றன. 73

காமம், கோபம், கவலை, மோகம், திமிறு, அலட்டிக் கொள்ளுதல் ஆகிய எப்போதுமிருக்கும் ஆறையும், புலன்களை அடக்கியவன் எவன் தன் வசத்தல் வைத்திருக்கிறானே அவனுக்குப் பாவங்கள் ஏற்படுவதில்லை. அனர்த்தம் எப்படி ஏற்படும்? 74

திருடர்கள், மருத்துவர்கள், பெண்கள், புரோஹிதர்கள், அரசன், பண்டிதர்கள் ஆகிய இந்த அறுவரும், கவனமில்லாதிருப்பவர்கள், நோய்கள், காமமுடையவர்கள், யாகம் செய்பவர்கள், சண்டையிட்டுக் கொண்டிருப்பவர்கள், முட்டாள்கள் ஆகிய அறுவரை ஆதாரமாக வைத்துக் கொண்டிருக்கின்றனர். 75

பசுக்கள், சேவை, உழவு, மனைவி, கல்வி, வேளாளனின் செல்வம் ஆகிய இவை ஆறையும் ஒரு முஹூர்த்தத்திற்கு கவனிக்காவிட்டாலும் நாசமடைகின்றன. 76

கல்வி பெற்ற சிஷ்யர்கள், திருமணம் செய்தவர்கள் காமம் நீங்கியவர்கள், சாதிக்க வேண்டிதை சாதித்தவர்கள், கரையேற்றியவர்கள், நோயாளி ஆகிய ஆறு பேர்கள் தமக்கு உதவி செய்த ஆசார்யர், தாயார், பெண், உதவி செய்தவன், தோணி, மருத்துவன் ஆகியவர்களை முறையே இலட்சியம் செய்வதில்லை. 77

மன்ன! உடல் நலம், கடனில்லாதிருப்பது, வீட்டில் வசிப்பது, நல்லோர்களின் சேர்க்கை, வாழும் வழியில் உதவி பயமின்மை ஆகிய இவை ஆறும் உலகத்தில் சுகத்தைத் தருகின்றன. 78

பொருமைப்படுபவன், தீயவன், திருப்தியில்லாதவன் கோபமுடையவன், எப்போதும் சந்தேகப்படுபவன், மற்ற வனின் அதிருஷ்டத்தை நம்பி வாழ்பவன் இவர்கள் ஆறு பேறும் எப்போதும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். 79

நன்கு ஸ்தானம் அடைந்த நாயகர்கள், துன்பத்தைத் தரும் எந்த ஏழு குற்றங்களினல் நாசமடைகின்றனரோ அவை அரசனுல் நீக்கப்படவேண்டும். அவை வருமாறு, பெண்கள், சூது, வேட்டை, குடித்தல், கடின வசை, கடுந் தண்டனை கொடுத்தல், செல்வத்தை வீணுகச் செலவழித் த்ல் என்பவை அவை. 0

பாரதரே! கூறப்படபோகும் இந்த எட்டும் சுகத்தின் ஸார வடிவாக உள்ளன. இவைகள் இங்குதான் காணப்படு கின்றன அவைகளே ஒருவனது சுகத்திற்குக் காரணங்களா கவும் உள்ளன. 81

நண்பர்களின் வருகை, மிகுந்த செல்வம் பெறுதல், புதல்வனைக் கட்டித் தழுவுதல், மனைவியுடன் ஸம்போகம் கொள்ளுதல், பொருத்தமான காலத்தில் விரும்பியோருடன் பேசுதல், தன் கட்சிக்குச் சேர்ந்தவர்களை முன்னேற்ற முடைதல், தான் எதிர்பார்த்தவற்றை அடைதல், மக்களின் நடுவில் உயர்ந்த நிலை அடைதல். 82

அறிவு, உயர்ந்த பிறவி, புலன்களை அடக்குதல், கல்வி வீரம், அதிகமாகப் பேசாமலிருத்தல், சக்திக்கேற்ற தானம் நன்றி ஆகிய எட்டு குணங்கள் மனிதனுக்குப் பெருமை சேர்க்கின்றன, 83

இந்த (உடலாகிய) இல்லத்திற்கு ஒன்பது கதவுகளும் (அவித்யை, காமம், செயல் என்னும்) மூன்று தூண்களும்

(சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) ஐந்து காட்சிகளும் இருக்கின்றன. அது ஆத்மாவின் மேற்பார்வையில் உள்ளது. அவனை (ஆத்மாவை) எவன் அறிந்து கொள்வானே அவன் மேன்மையானவன். 84

த்ருதராஷ்டிரரே! பத்து மனிதர்கள் தர்மத்தை அறிவதில்லை. அவர்கள் யாவர் எனத் தெரிந்துகொள்வீராக வெறிபிடித்தவன், கவனம் செலுத்தாதவன், பைத்தியக் காரன், அசதி அடைந்தவன், கோபமாய் உள்ளவன், பசியு டையவன், அவசரப்படுபவ்ன், பேராசைக்காரன், பயந்த வன், காமம் உடையவன் ஆகியவர்களே அந்த பத்து மனி தர்கள். ஆதலால், பண்டிதன் இவ்ர்களிடம் தொடர்பு வைத் துக்கொள்வதில்லை. 85

எந்த அரசன் காமத்தையும் கோபத்தையும் விடுகிறு னே, தகுதியுடையவனிடம் செல்வத்தைத் தருகின்றுனே விவேகமும் கல்வியும் பெற்றுள்ளானே, விரைவாகச் செயல் களைச் செய்பவனுயுமுள்ளானே அப்படிப்பட்டவனை எல்லோ ரும் பிரமாணமாய் ஒப்புக் கொள்கின்றனர். 86

எவன் மனிதர்களை விச்வாசம் வைக்கும்படி எப்படி செய்வது என்று அறிந்துள்ளானே, குற்றம் நிச்சயிக்கப் பட்டபின் தண்டனை தருகின்றுனே, எவ்வளவிற்குத் தண்ட னையளிக்க வேண்டும் என்றும் பொறுமையை எப்போது காட்டவேண்டும் என்றும் தெரிந்துள்ளானே, அப்பேற்பட் டவ்னுக்கு எல்லா செல்வங்களுடம சேருகின்றன. 87

எவன் அசட்டை செய்யாமல் பலமில்லாத எதிரியை யும் விடுவதில்லையோ, எவன் எதிரியுடன் மதியை முன் கொண்டு ஜாக்கிரதையாகப் பழகுகிறுனே, தன்னைக் காட் டிலும் பலமுடையவரிடம் போரை விரும்புவதில்லையோ,

எவன் தகுந்த சமயத்தில் தனது வீரத்தைக் காட்டுகிறுனே அப்படிப் பட்டவன் 'தீரன்' எனப்படுகிறுன். 88

எவன் ஏற்பட்ட ஆபத்திஞல் கவலைப்படுவதில்லையோ: கவனம் செலுத்தி முயற்சி செய்வானே, துன்பமிருக்கும் காலத்தில் அதைப் பொறுத்துக் கொள்கிருனே அப்பேற் பட்ட மஹாத்மாவாகிய—காரிய பாரத்தைத் தாங்குபவ ளுகிய -இத்தகையவனது எதிரிகள் வெல்லப்படுகின்றனர். 89

எவன் வீணுக வீட்டை விட்டு வெளியில் செல்வ தில்லையோ, பாவிகளிடம் சம்பந்தம் வைத்துக்கொள்வ தில்லையோ, பிறரது மனைவிகளைக் கெடுப்பதில்லையோ, அஹங்காரம், திருட்டு, நன்றியின்மை, கள் குடித்தல் போன்ற வைகளைச் செய்வதில்லையோ அப்பேற்பட்டவன் எப்போதும் இன்பத்தில் உள்ளவன். 90

எவன் தர்மம், அர்த்தம் மற்றும் காமத்தை அடை வதற்காகத் தன் புகழைப் பாடிக்கொண்டிருப்பதில்லையோ, கேட்டபோது உண்மையையே கூறுகின்றுனே. தன் நண்பர் களுக்காகவும் கலகத்தை விரும்புவதில்லையோ, அவமானப் படுத்தப்பட்டாலும் கோபமடைவதில்லையோ அப்பேற் பட்டவன் அறிவாளியாவான். 91

எவன் வெறுப்பைக் காட்டுவதில்லையோ. கருணையுடன் உள்ளானே, சக்தியில்லாதவனுக இருந்தும் பிறரிடம் அஹங்காரத்துடன் பேசுவதில்லையோ, சண்டைகளை மன்னித்து விடுகிருனே அப்பேற்பட்டவன் எங்கும் புகழடைகின்றுன். 92

எவன் தான் உயர்ந்தவன் என்கிற வேஷத்தை எக் கணமும் தரிப்பதில்லையோ, எவன் தன்னைப் பாராட்டிக் கொண்டு பிறரைக் குறை சொல்வதில்லையோ, எவன் தன்னை மறந்துகூட புண்படுத்தும் சொற்களைக் கூறுவதில்லையோ அப்பேற்பட்டவனை மனிதர்கள் பிரியமாகக் கருதுகின்றனர், 93

எவன் பகைமையை கிளப்புவதில்லையோ, எவன் அமைதியாய் உள்ளானோ, எவன் அஹங்காரத்துடன் நடந்து கொள்வதில்லையோ, அளவுக்கு மீறிய பணிவையும் காட்டுவதில்லையோ, எவன், ''நான் கஷ்டத்தில் உள்ளேன்'' என்று கூட செய்யக்கூடாத செயல்களைச் செய்வதில்லையோ அப்பேற்பட்ட நன்னடத்தை உடையவனை உயர்ந்தவன் என்று பண்பாளர்கள் கூறுகின்றனர். 94

எவன் தன் சுகத்தில் அளவுக்கு மீறிய மகிழ்ச்சியைக் காண்பிப்பதில்லையோ, மற்றவனது துன்பத்தைக் கண்டு சந்தோசபடுவதில்லையோ, தானம் கொடுத்த பின் தாபப்படுவதில்லையோ அப்பேற்பட்டவன் ஸத்புருஷன் என்றும், பண்பாளர்களின் குணநலன் பெற்றவன் என்றும் கூறப்படுகின்றான். 95

எவன் வெவ்வேறு இடங்களுக்குப் பொருந்திய ஆசாரங்களையும் ஜாதி தர்மங்களையும் அறிந்துகொள்ள விரும்புகின்றானோ, உயர்ந்ததையும்—தாழ்ந்தையும் அறிந்துள்ளானோ, அப்பேற்பட்டவன் எங்கு சென்றாலும் அங்கு எப்பொழும் பெருமக்களது தலைவனாக இருக்கின்றான். 96

அகந்தை, மோஹம், பொறாமை, கெட்ட செயல், அரசனை வெறுப்பது, நேர்மையின்மை [தந்திரமான வழி] பலரிடம் பகைமை, குடிகாரர்கள் மற்றும் தீயவர்களிடம் கூட வாதம் செய்தல் போன்றவைகளை எவன் விட்டு விடுகிறானோ அவன் உயர்ந்த அறிவாளி. 97

எவன் தானம், தேவதைக்காகச் செய்யும் செயல்கள், பிராயச்சித்தங்கள், பலவிதமான உலக நடைமுறை மூலமாகத் தீர்மானிக்கப்பட்ட செயல்கள்—போன்றவற்றை ஒழுங்காகச் செய்கின்றானோ அப்பேற்பட்டவனின் மேன்மையை தேவதைகளே அளிக்கின்றனர். 98

எவன் தனக்கு நிகரானவர்களுடன் (சமமானவர்) திருமணம் செய்து கொள்கிறானோ, தன்னைவிட; தாழ்ந்தவருடன் திருமணம் செய்து கொள்வதில்லையோ, தனக்குச் சமானமாய் இருப்பவர்களிடம் நட்பு, வியவஹாரம், பேச்சு வைத்துகொள்கிறானோ, தன்னைக் காட்டிலும் உயர்ந்த குணம் உடையவர்களுக்கு மரியாதை செலுத்துகிறானோ அப்பேற்பட்ட அறிவாளியின் செயல்கள் நன்கு உள்ள. 99

எவன் தன்னை அண்டி வாழ்பவர்களுக்குக் கொடுத்த பின் தான் அளவோடு உண்கிறானோ, அளவில்லாத செயல்களைச் செய்துவிட்டு அளவுடன் தூங்குகிறானோ, தன்னிடம் கேட்கப்பட்டபோது எதிரிக்கும் தானம் செய்கிறானோ அப்பேற்பட்ட மனவடக்கம் உள்ளவனை இடையூறுகள் விட்டுவிடுகின்றன. 100

எவன் செய்ய விரும்பும் எந்த ஒரு செயலும் தவறானது என்று மக்கள் கருதுவதில்லையோ, எவன் தன் திட்டங்களை இரகசியமாக வைத்திருக்கிறானோ, ஆனால் நன்கு செயல்களைச் செய்கின்றானோ, அப்பேற்பட்டவனது சிறு பொருளும் அவனை விட்டு நழுவுவதில்லை. 101

எவன் எல்லா உயிர்களிடத்தும் நட்புடனுள்ளானோ உண்மையைப்பேசுகின்றானோ, மிருதுவாய் உள்ளானோ, எவன் பெருமையை அளிக்கின்றானோ, தூயமனமுடையவனுயுள்ளானோ, உறவினர்களின் நடுவில் நல்ல உருவம் உடைய உயர்ந்த மணியைப் போல் விளங்குகின்றான். 102

எவன் தனது குற்றங்களை மற்றவர்கள் அறியாமலிருந்தாலும் தான் வெட்கப்படுகின்றானோ, அப்பேற்பட்டவன் அனைத்துலகங்களுக்கும் குருவாகின்றான். அளவில்லாத சக்தியையும், நல்ல மனதும், மனவடக்கமும் கொண்டுள்ள அவன் சூரியனைப் போல் தனது தேஜஸ்ஸால் ஒளி வீசுகின்றான். 103

சாபத்தினுல் பாதிக்கப்பெற்ற பாண்டுவிற்குக் காட்டில் ஐந்து இந்திரர்களுக்குச் சமமான ஐந்து புதல்வர்கள் பிறந்தனர். அம்பிகையின் புதல்வனே! அக் குழந்தைகளை நீ வளர்த்து, கற்பித்தாய், அவர்கள் உம் கட்டளைக்கிணங்க நடந்து கொள்கின்றனர். 104

தந்தையே! அவர்களுக்கு உரித்தான இராஜ்யத்தைக் கொடுத்து விட்டு இன்பத்துடன், உமது புதல்வர்களோடு சந்தோஷமாக இருப்பீர்கள். மன்னு! நீர் தேவர்கள் மற்றும் மனிதர்களின் சந்தேகத்திற்கு இடமாகமாட்டீர்கள். 105

த்ருதராஷ்டிரர் கூறினுர் :

குழந்தையே! தூக்கமின்மையினுல் அவதிப்பட்டுக் கொண்டிருப்பவன் எதைச் செய்யவேண்டும் என்பதைக் கூறு! எங்களில் நீ அறத்தையும் பொருளையும் பற்றி அறிந்தவன். 106

விதுரரே! யுதிஷ்டிரருக்கு எது நல்லது என்பதை ஆராய்ந்து சரிவரத் தெரிவிப்பாயாக! தாராளமனம் படைத்தவனே! குருக்களுக்கு எது நன்மையை உண்டாக்குமோ அதைக் கூறுவாயக! 107

நான் முன்பு செய்த பாவத்தையும், வரவிருக்கும் பாவத்தினுல் வரக்கூடிய துக்கத்தையும் நினைத்துக்கொண்டு குழம்பிய மனதுடன் உன்னைக் கேட்கின்றேன். அறிவாளியே யுதிஷ்டிரர் சிந்திக்கப்பட்டதெல்லாவற்றையும் தகுந்த வகையில் என்னிடம் கூறுவாய். 108

ஸ்ரீ விதுரர் கூறினுர் :

எவன், ஒருவனது தோல்வியை விரும்புவதில்லையோ, அவன், தன்னை கேட்கப்படாவிட்டாலும் மற்றவர்களின் நன்மை, பாவம், விரும்பாதவை, விரும்பியது—இவைபற்றிக் கூறவேண்டும். 109

மன்னு! ஆதலால் குருக்களுக்கு எது நல்லதோ அதைப் பற்றி உன்னிடம் கூறுகிறேன். எனது தர்மத்திற்கு பொருந்திய நன்மையுண்டாக்கும் வார்த்தைகளைக் கேள்! 110

பரதனே! எந்த வெற்றியைத் தரும் எந்த செயல் நீதிக்குப் புறம்பாகவும் நேர்வழியில்லாததாகவும் உள்ளதோ அதில் உம் மனதை வைக்காதீர்! 111

நேர்மையோடும், தகுந்த சாதனங்களோடும் செய்யப்பட்ட செயல் வெற்றிபெறவில்லையென்ருல் புத்தியுடையவன் கவலைப்படக் கூடாது. 112

பலன் கொடுக்கக்கூடிய செயல்களின் பிரயோஜனங்களை நன்கு தீர்மானித்து அவைகளைச் செய்ய வேண்டும். ஆத்திரப்பட்.டு செய்யக்கூடாது. 113

தீரன், தனது திறமை, செயலின் இயற்கை, பலன் ஆகிய இவைகளைச் சிந்தித்துச் செயலைச் செய்யவோ செய்யாமலிருக்கவோ வேண்டும். 114

எவன், பிரதேசம் லாபம், நஷ்டம், பொக்கிஷம், மக்கள் தொகை, தண்டனை ஆகிய இவைகளின் அளவை அறிந்து கொள்ளாமலிருக்கிருனே, அவன் அரசனுக நீடிக்க மாட்டான். 115

எவன் மேற்கூறப்பட்ட இவைகளின் அளவுகளை அளந்துள்ளானே, மேலும எவனுக்கு அறம் மற்றும் பொருளைப் பற்றிய அறிவு உள்ளதோ, அவன் இராஜ்யத்தை அடைகிருன். 116

இராஜ்யத்தை அடைந்து விட்டால் அரசன் பொருந்தாத வகையில் நடந்து கொள்ளக்கூடாது. அவிநயம் (அடக்கமின்மை) செல்வத்தை, மூப்பு உத்தமான அழகை அழிப்பதைப் போல், அழித்து விடுகிறது. 117

தனது செயலைப் பற்றியோ, அதன் பலனைப் பற்றியோ சிந்திக்காமல் பேராசையினால் மீன், மாமிசத்தோடு இணைக்கப்பட்டுள்ள தூண்டில் முள்ளை கடித்துவிடும். 118

எதை ஏற்றுக் கொள்ளலாமோ, எது ஜீர்ணமாகுமோ, எது நன்மையைத் தருமோ அதை, தன் செழிப்பை விரும்புபவன் ஏற்றுக் கொள்ள வேண்டும் 119

எவன் பழுக்காத பழங்களை மரத்திலிருந்து பறிக்கின்றானோ அவன் அவைகளின் ரசத்தைப் பெறுவதில்லை. அவைகளின் விதையும் நாசமாகிறது. 120

இதற்கு நேர்மாறாக எவன் தகுந்த காலத்தில் பழுத்த பழத்தைப் பறிக்கின்றானோ அவன் அதன் ரசத்தையும், அதன் விதையால் ஏற்படும் மற்ற பழங்களையும் அடைகிறான், 121

ஒரு தேனீ புஷ்பங்களை அழிக்காமல் எப்படி தேனை அருந்துகிறதோ அதே போல் அரசன் மனிதர்களிடமிருந்து அவர்களுக்கு இடையூறு தராமல் வரி வசூலிக்க வேண்டும் 122

செடியை வேரோடு பிடுங்காமல் மாலை செய்பவனைப் போல் பூக்களைப் பறிக்க வேண்டும். கரியைத் தயாரிப்பவனைப் போல் செய்யக்கூடாது. 123

இதைச் செய்தால் எனக்கென்ன ஆகும், இதைச் செய்யாமலிருந்தால் (எனக்கு) என்ன ஆகும் என்று சிந்தித்து, மனிதன் செயலைச் செய்வதையோ செய்யாமலிருப்பதையோ மேற்கொள்ள வேண்டும். 124

செய்யமுடியாதஎந்தச் செயல்களில் முயற்சி பயனற்றதாய் உள்ளதோ அவைகளைத் தொடங்கக் கூடாது. 125

எவனின் அனுக்ரஹம் பயனற்றதாய் உள்ளதோ, மேலும் எவனின் கோபம் பிரயோஜனமற்றதாய் உள்ளதோ அப்படிப்பட்டவனை மக்கள், ''பெண்கள் எவ்வாறு நபும்ஸகனைக் (அலி) கணவனாக விரும்புவதில்லையோ'' அதே போல் அரசனாக விரும்புவதில்லை. 126

அறிவுடைய மனிதன் எந்தச் செயல்கள் சிறு முயற்சி செய்தாலும் உயர்ந்த பலனைத் தருகின்றனவோ அவைகளை உடனடியாகத் தொடங்குகிறான். அப்பேற்பட்ட செயல்களைச் செய்வதில் அவன் தடையை சந்திப்பதில்லை 127

எந்த அரசன் நேர்மையோடும் அன்போடும் எல்லோரையும் கண்களால் பார்க்கின்றானோ அப்பேற்பட்டவன் மௌனமாய் அமர்ந்திருந்தாலும் மக்கள் அவனிடத்தில் திருப்திபடுகின்றனர். 128

நன்கு பூக்கள் இருந்தால் பழமற்றதாய் உள்ளது: பழமுடையதாய் இருந்தாலும் ஏறுவதற்குக் கடினம். பழுக்காமலிருந்தாலும் பழுத்ததைப் போல் இருக்கிறது, அப்படியிருந்தால் அதற்கு அழிவே இல்லை. 126

பூக்களுடையது-சொல், பார்வை மற்றும் அனுக்ரஹத்தைக் காட்டிக் கொண்டிருப்பது, பழமில்லாதது—பணத்தால் வேலைக்காரனை உயர்நிலைக்கு கொண்டுவரக் கூடாது. ஏறுவ்தற்குக் கடினமானது—வேலைக்காரனின் வசத்தில் விழக்கூடாது. பழுக்காமலிருப்பது—உள்ளே பழக்கமில்லாவிட்டாலும் வெளியே பழுத்தைப் போல் நடந்துகொள்ள வேண்டும். 130

மிருகங்கள் வேடனைக் கண்டு பயப்படுவதைப் போல் மக்கள் எவனைக்கண்டு பயப்படுகின்றனரோ, அப்படிப்பட்டவன் கடலை எல்லையாகக்கொண்ட பூமியை ஆண்டாலும், அவன் தோல்வியுறுகிறான். 131

தந்தை, தாத்தா போன்றவர்களால் அடையப்பெற்ற அரசை ஒருவன் பெற்றாலும், காற்றினால் மேகம் நாசமடைவதைப் போல் இவன் அதர்மத்தில் ஈடுபட்டால் அது போய் விடும். 132

எவன், கண்கள், மனம், சொற்கள், செயல்கள் போன்ற நான்கின் மூலமாக உலகங்களைத் திருப்திபடுத்துகின்றானோ அவனிடத்தில் மக்கள் அன்பு வைக்கின்றனர். 133

நல்லோர்கள் முன்பு நடந்த வழியில் எந்த அரசன் தர்மத்தைக் கடைப்பிடிக்கிருனே அப்பேற்பட்டவனுக்கு செல்வமும் செழிப்புள்ள பூமியும் மேலும் வளர்கிறது. 134

ஆனல் [அவன்] தர்மத்தைக் கடைப்பிடிக்காமல் அதர்மத்தைக் கடைப்பிடித்தால் நெருப்பிலிடப்பட்ட தோலைப் போல் பூமி சுருங்குகிறது. 135

மற்றவனின் அரசை அழிப்பதற்கு எந்த முயற்சியை ஒருவன் செய்கின்ருனே அதே போல் அவன் தன் அரசைக் காப்பதற்கு முயற்சிக்க வேண்டும். 136

இராஜ்யத்தை தர்மத்தின் மூலமாகப் பெற வேண்டும். இராஜ்யத்தை தர்மத்தின் மூலமாக இரக்ஷிக்க வேண்டும். தர்மத்தை வேராகக் கொண்ட செல்வத்தைப் பெற்ருல் அவன் இராஜ்யத்தை விடவேண்டியதில்லை. அதுவும் நாசமடைவதில்லை. 137

கனிமதாதுகளிலிருந்து தங்கத்தைப் பெறுவதைப் போல் பைத்தியகாரனின் தொடர்பற்ற சொற்கள், குழந்தைகளின் சொற்கள் போன்ற எல்லா வகையிலும் ஸாரத்தை எடுத்துக்கொள்ள வேண்டும். 138

நன்னடத்தை, நற்சொற்கள், நற்செயல்களான இவைகளை, 'சிலா' முறையில் வாழ்பவன் (அறுபடைக்கு பின்பு வயலிலிருந்து மீதமிருக்கும்) நெல்லைப் பெறுவது போல் தீரனுனவன் சேர்த்துக்கொண்டிருக்க வேண்டும். 139

பசுக்கள் நாற்றத்தின் மூலமாகப் பார்க்கின்றன. ப்ராஹ்மணர்கள் வேதத்தின் மூலமாகப் நோக்குகின்றனர். அரசர்கள் தூதர்கள் மூலமாகப் பார்க்கின்றனர். மற்றவர்கள் கண்களால் பார்க்கின்றனர். 140

மன்னு! கறப்பதற்கு கஷ்டத்தைத் தரும் பசு அதிகத் துன்பத்தை அனுபவிக்கிறது. எந்த பசு பாலை உடனடியாக தருகிறதோ அது கஷ்டப்படுவதில்லை. 14

எது சுடவைக்காமல் வளைகிறதோ அது சூடாக்கப் படுவதில்லை. எந்த விறகு தானாகவே வளைகிறதோ அதை யாரும் வளைய வைப்பதில்லை. 142

மேற்கூறிய உவமைகளைப்போல் அறிவாளி தன்னைக் காட்டிலும் பலசாலியாய் இருப்பவனின் முன்பு வணங்க வேண்டும். எவன் பலசாலியை வணங்குகிறானோ அவன் இந்திரனையே வணங்குகிறான். 143

பிராணிகளுக்கு மழையைத் தலைவனாகக் கொண்டிருப்பவனும், அரசர்களுக்கு நண்பர்களும் உறவினர்களும், பெண்களுக்குக் கணவர்களும் துணையாவார். பிராஹ்மணர்களுக்கு வேதமே உறவினர்கள். 144

தர்மம் உண்மையால் காக்கப்படுகின்றது. கல்வி பயிற்சியினால் காக்கப்படுகிறது. அழகு குளியலினால் காக்கப் படுகிறது. குலம் நற்பழக்கங்களினால் காக்கப்படுகிறது. 145

நெல் அளப்பதினால் காக்கப்படுகிறது. குதிரைகள் ஓட்டத்தினால் காக்கப்படுகின்றன. பசுக்கள் மேற்பார்வையால் காக்கப்படுகின்றன. பெண்கள் கந்தல் ஆடைகளினால் காக்கப்படுகின்றனர். 146

நன்னடத்தையில்லாதவனுக்கு குலத்தினால் மட்டும் உயர்ந்த நிலை இல்லை என்பது என் கருத்து தாழ்ந்த வகுப்பிற்குச் சேர்ந்தவர்களும் நடவடிக்கையினால் உயர்ந்தவர்கள் ஆகின்றனர். 147

எவன் மற்றவனின் செல்வம், உருவம், சாமர்த்தியம் குலம், இன்பம், ஸௌபாக்கியம், மரியாதை போன்றவைகளைக் கண்டு பொறாமைப்படுகின்றானோ அவனது வியாதிக்கு முடிவேயில்லை. 148

தவறைச் செய்து விடுவேனோ, செய்ய வேண்டியதைச் செய்யாமலிருந்து விடுவேனோ, எனது திட்டங்களைப் பொருந்தாத காலத்தில் வெளியிட்டு விடுவேனோ—என்று பயப்படுகின்ற ஒருவன் மதமுண்டாக்கும் பொருளை உட்கொள்ளக் கூடாது. 149

கல்வியால் வந்த கர்வம், செல்வத்தினுல் வந்த கர்வம், தனக்குச் சேர்ந்தவர்களால் வந்தகர்வம். ஆகிய இம் மூன்றின் மூலமாக சிறிதளவே அறிவுடையவர்கள் கர்வம் பிடித்தவர்களாகின்றனர். ஆனுல், இவ்வாறிருக்கையிலும் நல்லோர்கள் இவைகளை அடக்குகின்றனர். 150

தீயவர்கள், நல்லோர்களின் பிரார்த்தனைக்கிணங்க அவர்களுக்காகச் சிறு காரியத்தைச் செய்தாலும், மக்கள் அவர்களை தீயவர்கள் என்று கருதினுலும் தாங்கள் 'நல்லோர்கள்' என்று கருதிக் கொள்கிறுர்கள். 151

நல்லோர்கள் மனவடக்கமுடையவர்களின் கதியாவ்ர் நல்லோர்கள்தான் நல்லோர்களுக்குக் கதியாவ்ர். தீயவர்களின் கதியும் நல்லோர்கள். தீயவர்கள் நல்லோர்களுக்குக் கதியாக மட்டார்கள், 152

நல்ல ஆடைகளையணிந்தவ்ன் சபையை வெல்கிறுன் பசுவுடையவன் இனிப்புப் பண்டங்களைப் பெறுகிறுன்,வாகனமுடையவன் 'வழியை' வெல்கிறுன். நன்லடத்தையுள்ளவன் எல்லாவற்றையும் வென்றுவிடுவான், 153

மனிதனுக்கு பண்பு முக்கியம், அது எவனுக்கு இல்லையோ அப்பேறற்றவனுக்கு வாழ்கையினுலோ செல்வத்தினுலோ உறவினர்களாலோ ஒரு பிரயோஜனமுமில்லை. 154

பரதர்களில் காளையே! செல்வந்தர்களுக்கு மாமிசம் விசேஷமான உணவாகும். நடுத்தரத்திலிருப்பவர்களுக்கு மோர் உணவாகும். ஏழைகளுக்கு எண்ணெய் கலந்தவை உணவாகும்! 155

ஏழைகளின் உண்வுகள்தான் ருசிகரமாக உள்ளது. பசி ருசியை உண்டாக்குகின்றது அது செல்வந்தர்களுக்கு (பசி) கிடைப்பது கடினம். 156

சாதாரணமாக செல்வந்தர்களுக்கு ஜீரணசக்தி குறைவு! மன்னு! ஏழைகள் கட்டைகளையும ஜீரணிக்க முடியும். 157

கீழ்த்தரத்திற்குச் சேர்ந்தவர்களுக்கு உணவு கிடைக்குமா என்ற பயம். நடுத்தரத்திலுள்ளவர்களுக்குச் சாவைக் கண்டால் பயம். உயர்ந்த மனிதர்களுக்கு அவமான்த்தைக் கண்டால் பயம். 158

செல்வத்தினுல் கர்வமுற்றவன், குடிமயக்கம் போன்ற வெறியுள்ளவனைக் காட்டிலும் தாழ்ந்தவன். செல்வத்தினுல் வெறி பிடித்தவன் கீழே விழாமல் அறிவு பெறமட்டான். 159

புலன்கள் அடக்கப்படாமல், விஷயங்களுக்குச் சென்றதால் நட்சத்திரங்கள் கிரஹங்களினுல் பாதிக்கப்படுவதைப் போல் மக்கள் கஷ்டப்படுகின்றனர். 160

இயற்கையாக சேஷ்டையுண்டாக்கும் ஐம்புலன்களால் எவன் வெல்லபட்டுள்ளானே அவனது கஷ்டங்கள் வளர்பிறைச் சந்திரன் போல் வளர்கின்றன. 161

எவன் மனதை வெல்லாமல் மந்திரிகளை வெல்ல விரும்புகின்றானே, மேலும், எவன் மந்திரிகளை வசத்தில் வைத்துக் கொள்ளாமல் எதிரிகளை வெல்ல விரும்புகின்றானே அவன் நிச்சயமாகத் தோல்வியுறுகிறுன். 162

எவன் முதலில் மனதை எதிரியைப்போல் வைத்துக் கொண்டு வெல்கின்றானே, பிறகு மந்திரிகளை வசத்தில் வைத்துக்கொண்டு எதிரிகளை வெல்ல விரும்புகின்றானே அவனது ஆசை வீணுனது. 163

எவனது புலன்கள் அவன் வசத்தில் உள்ளனவோ, எவன் மனதை வென்றுள்ளானே, தவறு செய்பவர்களுக்கு எவன் காரணத்தை ஆராய்ந்து தண்டனை தருகின்ருனே அப்பேற்பட்ட அறிவாளியிடம் செல்வம் எப்போதும் வருகின்றது 164

மன்னு! மனிதனின் உடல் தேரைப் போலுள்ளது. ஆத்மா நாயகனைப் போலுள்ளது, புலன்கள் குதிரைகளாக உள்ளன அறிவாளி, அந்த[இந்திரியங்கள் என்னும்] நன்கு அடக்கப்பட்ட நல்ல குதிரைகளால், கவனத்துடன் உள்ள தீரன் தேரில் செல்வதைப் போல், செல்கின்ருனே அவன் இன்பத்தை அடைகின்ருன். 165

சுதந்தரமாயுள்ள அடக்கப்படாத குதிரைகள் எப்படி ஒழுங்காயில்லாத தேரோட்டியை வழியில் கஷ்டத்திற்காளாக்கி விடுகின்றனவோ அவவாறே இவைகள் [புலன்கள் என்னும் குதிரைகள்] அடக்கப்படாமலிருந்தால் கஷ்டமுண்டாக்க சமார்த்யமுள்ளவைகளாக இருக்கின்றன. 166

புலன்களை அடக்காததினுல் எந்த மூடன் இடையூறுகளிலிருந்து நன்மையை விரும்புகின்ருனே, மேலும், நல்லவற்றிலிருந்து தீயவற்றைக் காண்கின்ருனே அப்பேற்பட்டவ்ன் துன்பத்தையுள் இன்பமென்றே கருதுகின்ருன், 167

அறத்தையும், பொருளையும் எவன் விட்டு விட்டு புலன்களின் வசத்தில் உள்ளானே அவன் வளம், உயிர், செல்வம் மற்றும் மனைவியிடமிருந்து விரைவில் பிரிவு பெறுகிருன். 168

எவன் செல்வத்தின் நாயகனுயிருந்தும், புலன்களின் நாயகனுகயில்லையோ, அவன் புலன்களின் நாயகனுக இல்லாததால் செல்வத்திலிருந்து பிரிந்து விடுகிருன். 169

மனம், புத்தி மற்றும் புலன்களை அடக்கி விட்டு புத்தியின் மூலமாக சைதன்ய வடிவாகியுள்ள ஆத்மாவை நோக்க வேண்டும். ஒருவனே ஒருவ்னது உறவினன். ஒருவனே அவனது எதிரி. 170

தன்னைத்தான் வென்றவனுக்கு தானே உறவினன். அடங்கிய புத்தியே அவனது உறவினன். அடங்காத புத்தியே அவனது எதிரி. 171

மன்னா! எப்படி நீரில் மீன்கள் நைந்த வலையை கிழித்துக் கொண்டு சென்றுவிடுகின்றனவோ அவ்வாறே காமமும் கோபமும் அறிவை அழித்து விடுகின்றன. 172

எவன் தர்மத்தையும் அர்த்தத்தையும் நன்கு கவனித்து வெற்றியின் சாதனங்களைப் பெறுகின்றானோ அப்பேற்பட்டவன் விரும்பியதை அடைந்து எப்போதும் வளரும் சுகம் உடையவனாயிருக்கிறான். 173

எவன் மனதிற்குச் சேர்ந்த உள்ளே உள்ள ஐந்து எதிரிகளை வெல்லாமல் வெளியேயுள்ள எதிரிகளை வெல்ல விரும்புகின்றானோ, அவன் அந்த எதிரிகளால் வெல்லப் படுகின்றான். 174

பேரரசர்களும் புலன்களை அடக்காததினாலும், செல்வாக்கை விரும்புவதாலும், தமது செயல்களால் பாதிக்கப் படுகின்றனர் என்று காணப்படுகிறது. 175

பாவம் செய்யாதவனும் பாபிகளுடன் சம்பந்தத்தை விடாமல், சம்பந்தத்தை வைத்துக் கொள்வதனால் அவர்களுடன் தண்டனை அனுபவிக்கிறான். [எப்படியென்றால்] இது ஈரமாயுள்ள விறகு காய்ந்த விறகுடன் சேர்ந்தால் அதுவும் எரிந்துவிடுவதைப் போலுள்ளது. [ஆதலால் பாவிகளுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளக் கூடாது.] 176

எந்த மனிதன் மோஹத்தினால் ஐந்து வெவ்வேறு விஷயங்களுடன் சப்பந்தம் வைத்துக்கொண்டும் தனது ஐந்து எதிரிகளை அடக்குவதில்லையோ அவனை ஆபத்து பாதிக்கிறது. 177

பொருமையின்மை, நேர்மை, புனிதத்தன்மை, திருப்தி ப்ரீதி உண்டாகும் வகையில் பேசுதல், புலன்களை அடக்குதல், உண்மை, சபலம் இல்லாமலிருப்பது ஆகிய இவை தீயவர்களிடம் இருப்பதில்லை. 178

பரதனே! ஆத்ம ஞானம், சபலமில்லாமலிருப்பது, பொறுத்துக் கொள்வது. தர்மத்தில் ஈடுபாடு, சொற்கள் மற்றும் தானத்தை விளம்பரம் செய்யாமலிருப்பது போன்ற இவைகள் கீழ்த்தரமானவர்களிடம் இருப்பதில்லை. 179

புத்தியில்லாதவர்கள் அறிவாளிகளைக் கெட்ட வார்த்தைகளாலும், வீண் குற்றச்சாட்டுகள் மூலமாகவும் துன்பப் படுத்துகின்றனர். அவ்வாறு பேசுபவர்கள் பாவத்தை அடைகின்றனர். அவர்களை மன்னிக்கும் அறிவாளிகள் பாவத்திலிருந்து விடுதலை பெறுகின்றனர். 180

துன்பம் தருவது துஷ்டர்களின் பலம். தண்டனை அளிக்கும் சட்டம் அரசர்களின் பலம், சேவை செய்வது பெண்மணிகளின் பலம், மன்னிப்பது குணமுடையவர்களின் பலம். 181

மன்னு! வாக்கை அடக்குவது மிகக் கடினம் எனப் படுகிறது. பல விஷயங்களைப் பற்றி பொருள் செறிந்தவாறும் சமத்காரமாகவும் [சுவையாகவும்] உள்ள நீண்ட பேச்சு மிகக் கடினமானது. 182

மன்னு! சமத்காரமாயுள்ள நல்ல வார்த்தை மங்களத்தைத் தருகின்றது. அதே சமயம் கெட்ட வார்த்தைகள் இடையூறை விளைவிக்கின்றன. 183

அம்புகளால் குத்தப்பட்ட அல்லது கோடரியால் வெட்டப்பெற்ற வனம் வளரலாம். ஆனால் கெட்ட வார்த்தைகளால் பாதிக்கப்பட்ட உள்ளம் சரியாவதில்லை. 184

அம்பு, குண்டு, வேல் போன்றவைகளை சரீரத்திலிருந்து எடுத்து விடலாம். ஆனால் வார்த்தை என்கிற வேலால்

குத்தப்பட்ட இதயத்திலிருத்து அதை திரும்ப எடுக்க முடியாது. 185

வார்த்தை என்கிற அம்பு வாயிலிருந்து வருகிறது: அதனுல் காயமடைந்தவன் இரவும் பகலும் வருத்தப்படுகிருன். பிறருக்கு இவ்வாறு துன்பம் கொடுக்கக்கூடிய அம்பை பண்டிதன் விடக்கூடாது. 186

எவனுக்குத் தேவதைகள் தோல்வியைத் தருகின்றனவோ அவனது புத்தியை தேவதைகள் எடுத்துச் செல்கின்றனர். ஆதலால், அவன் தீய செயல்களுக்கு இறங்குகின்ருன். 187

புத்தி கலங்கி விட்டதால் அழிவு ஏற்படும் காலத்தில் தவருனது, உள்ளத்தில் 'சரி' என்றே தோன்றுகிறது. 188

பரதர்களின் கரஊயே! பாண்டவர்கள் விஷயத்தில் விரோதத்திஞல் உங்கள் புதல்வர்களுக்கு இம்மாதிரி விபரீதமான புத்தி ஏற்பட்டுள்ளது. நீர் அதை அறிவதில்லே. 189

த்ருதராஷ்டிரரே! அரசனின் இலக்ஷணங்கள் உள்ள யுதிஷ்டிரர் மூவுலகங்களுக்குத் தலேவஞக வேண்டும். அவர் மன்னஞக அழைக்கப்படுவதற்குத் தகுதியுடையவர். ஆஞல், உம்மால் காட்டிற்கு அனுப்பப்பட்டார். 190

உங்கள் புதல்வர்களே விட அவர் அரசகுலத்தில் உயர்ந்தவர். தேஜஸ்ஸிஞலும், அறிவிஞலும் அறத்தையும் பொருளேயும் அறிந்தவர். 191

பேரரசரே! குரூரத் தன்மை இல்லாததிஞலும், கருணே இருப்பதிஞலும், தர்மத்தில் ஈடுபாடு இருப்பதிஞலும், உன்னிடத்தில் மதிப்பு வைத்திருப்பதிஞலும் அவர் பல கஷ்டங்களேப் பொறுத்துக் கொண்டிருக்கிருர். 192

ஸ்ரீ விதுரர் கூறிஞர் :

மன்ஞதி மன்னனே! ஆதலால் நீ பூமிக்காகப் பொய் சொல்வது பொருந்தாது. புதல்வர்களுக்காகப் பொய்

சொல்லிப் புதல்வர்களுடனும், மந்திரிகளுடனும் சேர்ந்து நாசத்தை அடையாதே. 193

தேவர்கள்; பசுக்களைப் பராமரிப்பது போல க்ம்பை வைத்துக் கொண்டு காப்பதில்லை. எவர்களை அவர்கள் காக்க விரும்புகின்றனரோ அவர்களுக்கு நற்புத்தியைக் கொடுக்கின்றனர் 194

எவ்வளவிற்கு மனிதன் மனதை தர்மத்தின் பக்கம் திருப்புகிறுனே அவ்வளவிற்கு அவனுடைய எல்லாச் செயல்களும் இனிதே நடக்கின்றன. இங்கு சந்தேகத்திற்கு இடம் இல்லை. 195

பொய்யால் வாழ்ந்து கொண்டிருக்கும் ஏமாற்றுப் பேர்வழியை வேதங்கள் பாவத்திலிருந்து காப்பதில்லை. சிறு பறவைகள் கூட்டை விட்டுவிட்டுப் பறப்பதைப் போல் கடைசிக் காலத்தில் அவனை விட்டுவிடுகின்றன 196

கள் குடித்தல், கலகம் செய்வது, பல மனிதர்களுடன் பகையோடு இருப்பது, மனைவியிடமும் புதல்வனிடமும் உறவினர்களிடத்தும் கருத்து வேற்றுமையுடனிருப்பது, அரசனை வெறுப்பது, ஸ்த்ரீ—புருஷ வியவஹாரத்தில் தலையிடுவது—இவைகள் கெட்ட வழியைக் குறிப்பனவாக உள்ளன. இவைகளைத் தவிர்க்க வேண்டும். 197

கைரேகை பார்ப்பவன், வியாபாரியாக மாறிய திருடன், வேடன், மருத்துவன், எதிரி, நண்பன், பாடிப் போற்றுபவன்—இந்த ஏழு பேர்வழிகளும் சாட்சி கொடுப்பதற்குத் தகுதியற்றவர்கள், 198

அக்னி ஹோத்ரம், மௌன விரதம், கல்வி, சாதாரணமான யாகம் ஆகிய இவை நான்கும பயத்தைப் போக்குவதற்காக இருந்தாலும் தகுந்த வகையில் செய்யப் படாவிட்டால் பயத்தைத் தருகின்றன, 199

வீட்டிற்குத் தீ வைப்பவன், விஷத்தைத் தருபவன், காம விவகாரங்களுக்கு ஏற்பாடு செய்பவன், ஸோம ரஸத்தை விற்பவன், அம்பு தயாரிப்பவன், ஜோசியன், நண்பர்களுக்கு ஹிம்சை கொடுப்பவன், வேறு ஒருவனுக்கு கல்யாணமானவளுடன் ஸம்போகம் செய்து கொள்பவன், கர்ப்பச் சிதைவு செய்பவன், தன் குருவின் மனைவியுடன் ஸம்போகம் செய்பவன், குடிப்பழக்கமுள்ள ப்ராஹ்மணன், புண்படுத்தும் வார்த்தைகளைப் பேசியவன், பின்னாலிருந்து காட்டிக் கொடுப்பவன், நாஸ்திகன், வேதத்தை நிந்திப்பவன், லஞ்சம் வாங்குபவன், உபநயன காலம் மீறி உபநயனமானவன், திருட்டுத்தனமான பசுக்களை வதம் செய்பவன், காக்க வேண்டும் என்று பிரார்த்தனை செய்தவனை வதம் செய்பவன்-இவர்களெல்லாம் பிரம்ம ஞானிகளை வதம் செய்தவர்களுக்குச் சமம். 200

தங்கம் நெருப்பினாலும், நற்குலத்தில் பிறந்தவன் அவன் தொழிலினாலும், ஸாது அவனது வியவகாரத்தினாலும், சூரன் பயம் ஏற்படும் சமயத்திலும், தீரன் செல்வமில்லாத சமயத்திலும், அபாயமும், துன்பமும், இருக்கும் காலத்தில் எதிரிகளும், நண்பர்களும், சோதிக்கப்படுகின்றனர். 201

மூப்பு அழகை அழிக்கிறது. ஆசை தைரியத்தை நாசம் செய்கிறது. சாவு ப்ராணங்களை நாசம் செய்கிறது பொறாமை தர்மத்தை நாசம் செய்கிறது, கோபம் செல்வத்தை அழிக்கிறது தீயவர்களின் நட்பு நன்னடத்தையை அழிக்கிறது. காமம் பணிவை அழிக்கிறது. கர்வம் எல்லாவற்றையும் அழிக்கிறது 202

செழிப்பானது நல்ல செயல்களிருந்து உண்டாகிறது நல்ல செயல்களால் வளர்கிறது. சாமார்த்தியத்தினால் வேரை உள்ளே தள்ளி மனவடக்கத்தினால் உறுதி பெறுகிறது. 203

அறிவு, உயர்ந்த பிறவி, புலன்களை அடக்குதல், கல்வி வீரம், அதிகமாகப் பேசாமலிருத்தல், சக்திக்கேற்ற தானம் நன்றி ஆகிய எட்டு குணங்கள் மனிதனுக்குப் பெருமை சேர்க்கின்றன. 204

தந்தையே! ஒரு குணம் இந்த எட்டு குணங்களையும் ஒரே இடத்தில் சேரும்படிச் செய்கிறது. எப்போது அரசன் ஒரு மனிதனுக்குச் சன்மானம் செய்கின்றானோ [இயற்கையாக அக்குணங்கள் அவனிடமில்லாவிட்டாலும்] அப்போது அவனுக்கு அந்த எல்லா குணங்களும் பிரகாசத்தை தருகின்றன. 205

மன்னா! மனிதர்களின் இவ்வுலகில் அந்த எட்டு குணங்களும் ஸ்வர்க்கத்தைக் காட்டிக் கொடுக்கின்றன. அவைகளில் நான்கு குணங்கள் எப்போதும் நல்லோர்களிடம் உள்ளன. மற்ற நான்கை எப்போதும் நல்லோர்கள் அனுசரிப்பார்கள். 206

தியாகம், தானம், படிப்பு, தவம் ஆகிய இந்நான்கும் எப்போதும் நல்லவர்களிடம் உள்ளன. அடக்கம், உண்மை எளிமை, அஹிம்சை ஆகிய இந்நான்கும் நல்லோர்களால் கடைபிடிக்கப்படுகின்றன. 207

யாகம், படிப்பு, தானம், தவம், உண்மை, பொறுமை கருணை, திருப்தி—இந்த எட்டும் ''தர்மத்தின் வழி'' என்று கருதப்பட்டுள்ளது. 208

அவைகளில், முன்பு கூறப்பட்ட நான்கை வேஷத்திற்காகவும் [சிலர்] அனுஸரிக்கலாம். பின் கூறப்பட்ட நான்கு மஹாத்மாக்களிடம்தான் காணப்படுகின்றது. 209

பெரியோர் இல்லாத சபையில்லை. தர்மத்தை அறியாதவர்கள் பெரியோர்களல்ல. உண்மையில்லாதது தர்மமல்ல! ஏமாற்றத்தின் மூலம் அடைதல் மெய்யல்ல. 210

உண்மை, அழகு, சாஸ்திரக் கல்வி, உயர்ந்த பிறவி நன்னடவடிக்கை, பலம், செல்வம், வீரம், பல விஷயங்களில் பேசும் திறமை போன்றவை ஸ்வர்க்கத்திலேயே உண்டாகி யுள்ளன, 211

பாவம் செய்து [ஒருவன்] பாவி எனப் பெயர் பெறு கின்றான். தன் செயலுக்குப் பலனாய் தீயதையே அடைகின் றான். புண்ணியம் செய்து புண்ணியசாலி என்று பெயர் பெறு கின்றான். மிகுந்த நன்மையையே பலனாய்ப் பெறுகிறான், 212

ஆதலால், நன்கு தீர்மானமுள்ள மனிதன் பாவத்தைச் செய்யக் கூடாது. மீண்டும் மீண்டும் செய்யப்பட்ட பாவம் அறிவை நாசமாக்குகிறது. 213

எந்த மனிதனின் அறிவு நாசமாகிவிட்டதோ அவன் எப்போதும் பாவச் செயலையே செய்கின்றான். மீண்டும் மீண் டும் செய்யப்பட்ட புண்ணியம் அறிவை வளர்க்கிறது 214

அறிவு அதிகமாயுள்ள மனிதன் எப்பொழும் புண்ணிய மான செயல்களையே தொடங்குகிறான், புண்ணியத்தைச் செய்து புண்ணியசாலி என்று புகழ் பெற்று நற்கதியை அடைகின்றான். ஆதலால், மனதை அடக்கிவிட்டு மனிதன் எப்பொழும் புண்ணியத்தையே செய்ய வேண்டும். 215

பொறாமைப்படுபவன், பிறரைப் புண்படுத்துபவன், கொடுமையைச் செய்பவன், எப்பொழுதும் சண்டைபோடு பவன், ஏமாற்றுக்காரன் ஆகிய இவர்கள் பாவத்தைச் செய்து கொண்டு பெரிய கஷ்டத்தை அடைகின்றனர். 216

பொறாமையில்லாமலும், அறிவுடையவனாகவும், எப் பொழுதும் புண்ணியம் செய்து கொண்டுமிருப்பவன் பெரிய கஷ்டத்தை அடைவதேயில்லை. அவன் எங்கும் திகழ்ந்து கொண்டேயிருக்கிறான். 217

எவன் அறிவாளிகளிடமிருந்து அறிவைப் பெறுகின் றானோ அவன் பண்டிதன். அறிவாளி அறத்தையும் பொரு ளையும் அடைந்து தன் இன்பத்தை வளர்க்க முடியும், 218

எதைச் செய்தால் இரவில் சுகமாக இருக்கலாமோ அதை பகலிலேயே செய்ய வேண்டும். எதைச் செய்தால் மழைக்காலத்தில் சுகமாக வாழலாமோ அதை மற்ற எட்டு மாதங்களில் செய்ய வேண்டும். 219

மூப்பில் எதன் மூலம் சந்தோசமாக வாழ முடியுமோ அதைஇளம் வயதில் செய் இறந்த பின் எதன் மூலர் சுகமாக வாழலாமோ அதை உயிருடனிருக்கும்போதே செய். 220

ஜீர்ணமாகிவிட்ட உணவு, யௌவனம் மீறிய மனைவி போரில் வென்ற வீரன் மற்றும் வெற்றி பெற்ற தபஸ்வி ஆகிய இவர்கள் பாராட்டப்படுகின்றனர். 221

அதர்மத்தின் மூலம் பெற்ற செல்வத்தினுல் எந்த ஓட்டை மூடுவதற்கு முயற்சி செய்யப்படுகிறதோ அந்த ஓட்டை மூடப்படாமலேயே இருக்கிறது. வேறு ஓட்டைகளும் ஏற்படுகின்றன. 222

அடக்கமுடையவர்களைக் குரு ஆள்கிருன், துஷ்டர்களை மன்னன் ஆள்கிருன், வெளியே தெரியாமல் யார் பாவங்களைச் செய்கிருர்களோ அவர்களைச் சூரியனின் புதல்வனுன யமனே ஆள்கின்ருன். 223

ரிஷிகள், மஹாத்மாக்கள்—இவர்களின் சக்தியைத் தெரிந்துகொள்ள முடியாது. அதேபோல் ஸ்த்ரீகளின் தந்திமான செயல்களையும் தெரிந்துகொள்ள முடியாது 224

மன்னு! எந்தச் க்ஷத்திரியன் உத்தமப் ப்ராஹ்மணர்களைப் பூஜிக்கிருனே, தானம் செய்கிருனே, உறவினர்களுடன் நேர்மையாகப் பழகுகிருனே, நன்னடத்தை உள்ளவனுக இருக்கிருனே அவன் எப்பொழுதும் பூமியை ஆள்கிருன். 225

சூரன், கல்வி பெற்றவன், சேவை செய்யத் தெரிந்தவன் ஆகிய இம்மூன்று மனிதர்களும் பூமியிலிருந்து தங்கப் பூக்களைப் பறிக்கின்றனர். 226

புத்தியால் செய்யப்பட்ட செயல்கள் உயர்ந்தவை. கைகளால் சாதிக்கப்பட்டவை நடுத்தரம். சூதினுல் செய்யப் பட்டவைகள் தியவை, எதைச் செய்தால் தன்மேல் பார மான துன்பம் விழுமோ அவை கீழ்த்தரமானவை. 227

துரியோதனன், சகுனி, மூடனுன துச்சாதனன், கர்ணன் போன்ற இவர்களுச் சக்தியைக் கொடுத்துவிட்டு நீ எப்படிச் செழிப்பை விரும்புகிருய்? 228

பரதர்களில் காளேயே! எல்லா நற்குணங்களுடைய பாண்டவர்கள் உம்மைத் தந்தையாக வைத்துக் கொண்டி ருக்கின்ருர்கள். அவர்களோடு, புத்திரர்களிடம் நடப்பதைப் போல் நடந்து கொள்வீராக. 229

முதல் பாகம் முற்றிற்று.

ஸ்ரீ சோமசுந்தரஞான தேசிக சுவாமிகள் துதி

கானலுக்கு நீர்காட்டும் சக்தி யுண்டின்
கனபிரமச் சக்தியுமிவ் வுலகைக் காட்டும்
கானலின்நீர் கானலேபோல் உற்று நோக்கின்
கனபிரமச் சக்தியுமிங் காமோ பிரிவு
ஊனமிலாப் பிரம்மம்நீ யேயிச் சொல்லே
உத்திவேத அனுவமாக் கொள்வாய் யுள்ளம்
மானமிது வென்றுரைத்திர் கோவி லூர்வாழ்
மான்புமிகு சோமசுந்த ரமாமெங் குருவே.

உ சிவமயம்

தத்வமஸி, அகம்பிரம்மாஸ்மி, பிரஜ்ஞானம்பிரம்மம்,
அயமாத்மா பிரம்மம்

ஸ்ரீ ஆதிசங்கராச்சாரிய சுவாமிகள் அருளிச்செய்த தசகம்

ஓதுமண்ணிலை யுதகமிங்கிலை ஒளிருதேசிலை காலிலைப்
பூதவிண்ணிலை இந்திய மிலை புகன்றவைகளின் திரளிலை
ஏதுமேவிப சாரமேனி இறப்பதாலிச் சுழுத்தியின்
மீதியாயுள பூரணானந்த மேனியான சிவோகமே. 1

சாதியுமிலை ஆச்கிரமமிலை சாதியாச்சிரம தருமமாம்
நீதியுமிலை தாரணையிலை நிதித்தியாசன யோகமே
ஆதியுமிலை கற்பனையப வாதவாசிரியம் ஆதலால்
சோதியாய்நிலை நின்றபூரண சுத்தரூம சிவோகமே. 2

தந்தைதாயிலை தேவருமிலை தங்குலோகங் களுமிலைச்
சந்தவேதங்கள் இல்லையா கங்கள் சகலதீர்த்தங் களுமிலைத்
தொந்தமற்ற சுழுத்தியிற் தொடராதுநீங்கு தலான்மகா
னந்தபூரண சத்தியகேவல ஞானநித்த சிவோகமே. 3

பன்னுசாங்கிய சைவமுமிலை பாஞ்சராத்தி ரமுமிலை
உன்னுசைனமீ மாஞ்சையுமிலை உலகுண்மற்ற மதமிலை
துன்னுஞானிக ளனுபவப்பிர சித்ததூய சொரூபமாய்ப்
பின்னமேயற நின்ற பூரணப் பிரமமென்ற சிவோகமே, 4

வேணும் ஸ்ரீ சற்குருநாதன் துணை
சோம-கோபால சுவாமி
ஆனந்தாஸ்ரமம், குமாரபாளையம்.

பகருமேலிலை கீழிலைப்பர உள்ளிலைப் புறமுமிலை
அகலமேநடு விற்குறுக்கிலை யாகிழக்கிலை மேற்கிலை
ககனமென்ன நிறைந்தகண்டசிற் ககனகேவல ரூபமாய்ச்
சுககளச்சொக தாதிபேத விகினசித்த சிவோகமே 5

ஹிந்துக்களின் மாதக் கடமைகள்

1 மாதமொருமுறை அருகே உள்ள ஞானிகள், துறவிகள், மடாதிபதிகளைக் குடும்பத்துடன் சந்தித்து மன ஆறுதல் பெறவும்.
2 வீட்டில் ஏதேனும் பஜனை, பூஜை நிகழ்ச்சிகளைச் சக ஹிந்துக்களோடு இணைந்து நடத்தவும்.
3 புகழ் பெற்ற திருத்தலங்கள் அருகில் இருந்தால், சென்று தரிசித்து வரவும். இயன்ற அளவு தான தருமங்கள் செய்யவும்
4 அருகிலுள்ள அனாதை இல்லம்/முதியோர் இல்லம் ஆகிய ஏதேனும் ஒரு தொண்டு நிறுவனத்திற்குச் சென்று இயன்ற உதவிகளைச் செய்யவும்

ஹிந்துக்களின் பொதுவான கடமைகள்.

1 கட்டாயமாக வீடுகளில் 'ஓம்' படம் மாட்டி வைக்கவும். 'ஓம்' என்பது பிரணவ மந்திரமாகும்.
2 ஹிந்து இயக்கங்களின் தினசரி, வார, மாத வெளியீடுகளில் சந்தாதாரராகச் சேர்வதன் மூலம் ஹிந்து தர்மத்திற்கு வலுவூட்டவும். முடிந்தால் நண்பர்களைச் சேர்க்கவும்
3 ஹிந்து இயக்கங்களின் பிரசுரங்களைப் படித்து கருத்துக்களை எழுதி அனுப்பவும். அலட்சியமாக இருக்க வேண்டாம்.
4 ஏதேனும் ஒருவகையில் அண்டை ஹிந்துக்களுடன் ஒரு குழுவாக இணைந்து தொண்டாற்றவும்.
5 ஹிந்து மதத்தைப் பற்றி குழந்தைகட்கு எளிமையாக எடுத்துக் கூறவும். ஹிந்து எனக்கூறுவதில் பெருமைகொள்ள அறிவுறுத்தவும்
6 வீட்டில் பகவத்கீதை, புராணங்கள், ஹிந்து இயக்க பிரசுரங்கள் முதலியவற்றை வாங்கி வைத்து குடும்பத்தோடு படிக்கவும்
7 ஹிந்து மதம் சம்பந்தமான சந்தேகங்கட்கு ஹிந்து இயக்கங்களை அணுகவும்
8 ஹிந்து இயக்கப்பிரச்சாரகர்களை அழைத்து, அருகில் உள்ள ஹிந்துக்களோடு இணைந்து, கலந்து உரையாடவும்.
9 ஹிந்து தர்மத்திற்கு ஆதரவான அல்லது மாறுபட்ட கருத்துக்களைப் படித்தால், உடனே பத்திரிகைகட்கு உங்கள் கருத்துக்களைத் துணிந்து எழுதி அனுப்பவும்.
10 "நான் ஒரு ஹிந்து; பாரதம் ஹிந்துக்களின் தாயகம்" எனப் பெருமை கொள்ளவும்
11 ஆக இந்த நான்கு வித கடமைகளையும் தினசரி ஒருமுறை -யாவது தவறாமல் அவசியம் படித்து வருவது மிக முக்கிய கடமையாகும்.

பலன் : இந்தக் கடமைகளை இயன்ற அளவில் பக்தி சிரத்தை-யுடன் விடாமல் செய்து வருபவர்களுக்கு தெய்வானுகிரக முண்டாம், இப் பர போக பாக்கியங்கள் அவசியம் உண்டாகும்